# கலையும் பண்பாடும்

அலகு 1

காலஅளவு : 38 மணி நேரம்

## அலகு அறிமுகம்

மனிதனின் இருத்தலை / நிலைபேற்றை அவனுடைய வாழ்க்கைச் சூழல்தான் தீர்மானிக்கிறது. காலங்காலமாகத் தொடர்ந்து ஒரே சூழலில் வாழும் மனிதர்களுக்கிடையே காணப்படும் பழக்கங்கள் பண்பாடாக உருமாறுகின்றன. ஒரு நாட்டோடு ஒன்றிப்போன இயல்பே பண்பாடு. உணவு, உடை, வாழ்க்கைமுறை, வழிபாட்டு முறை, தொழில், கொண்டாடும் விழாக்கள், பண்டிகைகள் இவற்றை ஒட்டு மொத்தமாகப் பண்பாடு எனலாம். இந்தியா போன்ற பன்முகத் தன்மை கொண்ட நாடுகளில் பல்வேறு பண்பாடுகள் காணப்படுகின்றன. இவை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்ட பொழுதும் சில கூறுகளில் ஒற்றுமையும் காணப்படுகிறது.

பண்பாட்டை வெளிக்காட்டும் காரணிகளாக உணவு, உடை, பழக்கவழக்கங்கள் அமைகின்றன. அவ்வகையில் தமிழரின் பண்பாட்டில் மிக முக்கியமானது விருந்தோம்பல். அமுதமே கிடைத்தாலும் தனித்து உண்ணாது பகுத்துண்ணும் பண்புடையவர்கள் தமிழர்கள். இவர் வறியர், இவர் சிறியர் என்று வேறுபடுத்திப் பார்க்காதவர்கள். இதுபோன்ற பல்வேறு கருத்துகளைத் தமிழர்தம் செவ்விலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றைத் தொகுத்துக் கூறும் 'தமிழர் பண்பாடும் இலக்கியமும்' என்னும் கட்டுரை பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

இயந்திரத்தனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மனித வாழ்க்கையில் சுவை தரும் நிகழ்வாக விழாக்கள் அமைந்துவிடுதல் இயல்பு. உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ள விழாக்கள் வழிவகுக்கின்றன. அவ்வகையில் எல்லா மக்களும் தங்களது பண்பாட்டிற்குத் தக விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அவற்றை வீட்டு விழாக்கள், பொது விழாக்கள் என வகைப்படுத்தலாம்.

காவிரிப்பூம்பட்டினம் என்னும் ஊர் தமிழர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஊர். பண்டைச் சோழநாட்டின் தலைநகரம். அங்கு நடைபெறும் இந்திர விழாக் கொண்டாட்டங்கள் வரலாற்றில் மிகச் சிறப்பான பதிவைப்பெற்றுள்ளன. சில நம்பிக்கைகளின் அடிப்படையில் இவ்விழா எடுக்கப்பட்டது. இவ்விழாவின் பதிவுகளை மணிமேகலையில் 'இந்திரவிழா' என்னும் காதை அழகாக எடுத்துக்காட்டுகின்றது. இது தமிழர்களின் விழாக் கொண்டாட்ட முறைகளை வரிசைப்படுத்துகின்றது.

விழாக்கள் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருபவை. அதில் கலைகளுக்கு என்றும் சிறப்பிடம் உண்டு. அவ்வகையில் மக்களின் கலை உணர்வு இக்கலைகளின் வழி வெளிப்படுதல் இயல்பு. கலை வடிவங்கள் செவ்வியல் கலைகள் என்றும், நாட்டார் கலைகள் என்றும் வகைமைப் படுத்தப்படுகின்றன. இவை இரண்டும் காலச் சூழலுக்கு ஏற்ப மக்களால் கொண்டாடப் படுகின்றன. நாட்டார் கலைகள் மண்ணின் மரபோடு இயைந்த மக்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுவன. அவை இயல்பானவை. அவ்வகையில் தமிழர்களின் 'தெருக்கூத்து' என்ற கலை இங்குப் பாடமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 'கூத்து' என்னும் கலைவடிவம் மாணவர்களுக்கு அறிமுகமாகிறது. அதோடு ஒயிலாட்டம், வில்லுப் பாட்டு பற்றிய குறிப்பு 'ஆட்டம், பாட்டு' என்ற வகைமையினை அறிமுகம் செய்கின்றது.

தமிழகத்தோடு அதிக அளவு மொழி, பண்பாட்டு நிலைகளில் நெருங்கிய தொடர்புடையது கேரளம். எனவே கேரளப் பண்பாட்டை அறியும் நோக்கில் 'படையணி' என்னும் பாடப்பகுதி இடம்பெறுகிறது. இது கோயிற் கலையோடு தொடர்புடையது. இப்பகுதி கேரள மக்களின் கலையுணர்வையும், அவர்களது பண்பாட்டுச் சிறப்பையும் வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. இவற்றைக் கற்பதன் வாயிலாக மாணவன் பண்பாடு, விழா, கலை என்னும் மனித சமூகத்தின் வெளி அடையாளங்களை இனங்கண்டு கொள்கிறான். தன்னுடைய பண்பாடு, தனக்கே உரிய கலை, விழா என்பனவற்றை அறிந்து, அவற்றை நேசிக்கவும், பாதுகாக்கவும் வேண்டும் என்னும் மனநிலையைப் பெறுகிறான்.

## கற்றல் அடைவுகள்

- ❑ பண்பாட்டுக் கூறுகளை அறிந்து விளக்கக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.
- ❑ இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பினை விவாதித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- ❑ விழாக்கள் கலைகள் குறித்து வாழ்வியல் களஞ்சியத்திற்கான குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.
- ❑ வகைமை அடிப்படையில் நாட்டார் மற்றும் செவ்வியல் கலைகளின் புகைப்படங்களைத் தொகுக்கிறார்கள்.
- ❑ தமிழக - கேரளக் கலைகளின் பொதுப்பண்புகளைக் கண்டறிந்து கட்டுரைகள் தயாரிக்கிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்குகளும்

- பண்பாட்டை அறிதல் / நேசித்தல்.
- பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்னும் மனநிலையைப் பெறுதல்.
- கலைகளை நேசித்தல்.
- அழியும் நிலையிலிருக்கும் கலைகளைப் பாதுகாக்கும் மனநிலையைப் பெறுதல்
- விழாக்களில் கலந்துகொள்ளும் மனநிலை.
- சமூகத்தோடு ஒன்றிணைந்து செயல்படும் மனநிலை.
- மாற்றுத்திறனாளி மாணவர்களை மதிக்கும் மனநிலை.

## கற்றல் கருவிகள்

- ❄ பாடநூல்
- ❄ நிழற்படங்கள்
- ❄ காணொலிக் காட்சிகள் (Audio Visual)
- ❄ குறிப்பு நூல்கள்

## அலகுச்சட்டகம்

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • ஒரு சமூகத்தை அடையாளப்படுத்துவது அதன் பண்பாடு | **நுழைவுச் செயல்பாடு**<br>ஆசிரியர் பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களின் உணவு/ உடை/ பழக்கவழக்கங்கள் கொண்ட நிழற்படங்களை மின்னொளித்திரைக் காட்சி (PPT) மூலமாக வகுப்பறையில் காண்பித்தல். கலந்துரையாடல் நிகழ்த்துதல். 'பண்பாடு' எனும் கருத்தாக்கத்தினுள் கொண்டு வருதல்.<br>• பண்பாடு என்றால் என்ன?<br>• பண்பாட்டின் வளர்ச்சி நிலைகள் என்னென்ன?<br>மாணவர்கள் பண்பாடு பற்றிய கருத்துகள் மற்றும் வரையறைகளைக் குறிப்பேட்டில் எழுதுகிறார்கள். மேலும் 'பண்பாடு' பற்றிய கருத்தாக்கங்கள் மற்றும் வரையறைகளை இணையம், செய்தித்தாள்கள், புத்தகங்களிலிருந்து தேடித் தொகுக்கிறார்கள். தொகுத்தவற்றைக் குறிப்பாக எழுதுகிறார்கள்.<br>**இவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.**<br>வரவேண்டிய செய்திகளை ஆசிரியர் தொகுத்து வழங்குகிறார்.<br>• கருத்துத் தெளிவு<br>• தொகுப்பு முறை<br>• கருத்துக் கோவை | பண்பாடு பற்றிய விளக்கங்களையும் வரையறைகளையும் உருவாக்குகிறார்கள். |
| • தமிழ்ச் சமூகத்திற்கென ஒரு தனிப்பட்ட பண்பாடு உண்டு<br>• வாழ்வியல் கூறுகளைப் பண்பாட்டிற்கு ஏற்ப செயல்படுத்தும் திறன் | **பட்டியலிடுதல்**<br>தமிழ் மக்களுக்கெனத் தனித்த பண்பாடு உண்டா என்ற வினாவுடன் தமிழர் பண்பாடு பற்றிய மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டல். மேலும் சில விளக்கங்களைப் பெற குழுவாக மாணவர்களைத் "தமிழர் பண்பாடும் இலக்கியமும்' பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல். கருத்துக்களை விவரிக்கிறார்கள். தமிழரின் பண்பாட்டுக் கூறுகளைப் பட்டியலிடுகிறார்கள்.<br>குழுக்கள் பட்டியலிட்டதை வகுப்பில் வாசிக்கிறார்கள். இவற்றை குழுவும். ஆசிரியரும் மதிப்பீடு செய்தல். | தமிழர் பண்பாடு எனும் தலைப்பில் பத்திரிகைச் செய்தி எழுதுகிறார்கள். |

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr>
<td>• விழாக்கள் பண்பட்ட சமூகத்தின் வெளிப்பாடு</td>
<td>குழு மதிப்பீடு<br>• பண்பாட்டுக் கூறுகளின் தன்மை<br>• வரிசைப்படுத்துதலின் தன்மை<br>• கருத்துக் கோர்வை<br>ஆசிரியர் மதிப்பீடு<br>• கருத்துத் தெளிவு<br>• வெளியீட்டுத் திறன்<br>• பேச்சுத்திறன்<br><br>விவாதம்<br>விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கம் என்ன?<br>இதன் தேவை யாது? என்ற வினாக்களுடன் ஆசிரியர் கலந்துரையாடலைத் தொடங்குதல். விழாக்களில் காணப்படும் வகைகளை (குடும்பம், சமூகம்) விளக்குதல். மாணவர்கள் குழுவாகத் தாங்கள் கொண்டாடும் விழாக்களையும். அதன் வகைகளையும் விவாதித்து வரிசைப்படுத்துகின்றனர், தொடர்ந்து ஆசிரியர் இந்திரவிழா, மங்கல வாழ்த்து போன்ற பாடப்பகுதிகளுக்கு விளக்கம் கூறுதல். தொடர்ந்து மாணவர்கள் தாங்கள் வரிசைப்படுத்திய விழாக்களில் காணலாகும். சடங்கு முறைகளையும் பண்பாடுக் கூறுகளையும் குழுவாக விவாதம் செய்து குறிப்புகள் எழுதுகிறார்கள்.<br>குறிப்புகளைக் குழு மதிப்பீடு செய்ய வேண்டும். தொடர்ந்து ஆசிரியரும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.<br>• தகவல் சேகரிப்புமுறை<br>• கருத்துத் தெளிவு<br>• வெளியிடும் பாங்கு<br>• குழுவில் செயல்படும் முறை</td>
<td>• விழாக்களின் பண்பாட்டுக் கூறுகள் அடங்கிய வாழ்த்து அட்டைகள் தயார் செய்கிறார்கள்.<br>• விழாக்கள் பற்றி வாழ்வியல் களஞ்சியத்திற்கான குறிப்புகள் எழுதுகிறார்கள்</td>
</tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • கலைகள் மனிதனின் பண்பாட்டையும் அழகுணர்ச்சியையும் வெளிப்படுத்துவன. | **குழுக் கலந்துரையாடல்**<br>ஆசிரியர் பல்வேறு தமிழகக் கலைகளின் நிழற்படங்கள் மின்னொளித்திரைக் காட்சி (PPT) மூலமாக வகுப்பில் காண்பித்தல். அவற்றை மாணவர்கள் நாட்டார் கலைகள் என்றும், செவ்வியல் கலைகள் என்றும் வகைப்படுத்துகின்றனர்.<br>பின்னர் மாணவர்கள் குழுவாகப் பிரிந்து நாட்டார் கலைகளுக்கும் செவ்வியல் கலைகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். இவற்றை மாணவர்கள் சுயமதிப்பீடு செய்கிறார்கள்.<br>பின்னர் ஆசிரியர் இவற்றை மதிப்பிட்டுக் குறிப்புகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யவேண்டும். | • வகைமைகளின் அடிப்படையில் கலைகளுக்கான புகைப்படங்களைத் தொகுக்கிறார்கள். |
| • நாட்டார் கலைகளில் பல வடிவங்கள் உள்ளன.<br>• கலைகளை ரசிக்கும் திறன் | **குழுக் கலந்துரையாடல்**<br>தமிழகம் சார்ந்த ஆடல்/பாடல்/ நாடகம்/ கூத்து என்னும் பல்வேறு நாட்டார் கலை வடிவங்களின் காணொலிக் காட்சிகளை (Videos) காண்பித்தல்.<br>கலை வடிவங்கள் எதனால் வேறுபடுகின்றன என்பது பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடல் நிகழ்த்துதல்.<br>மாணவர்கள் கலைவடிவங்களை வகைப்படுத்துகிறார்கள். அவற்றைக் குழுவாகப் பிரிந்து குழுவிற்கு ஒரு கலைவடிவம் என்ற அடிப்படையில் கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். அதன் அடிப்படையில் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.<br>கட்டுரைகளை மாணவர்கள் குழு மதிப்பீடு செய்கிறார்கள். அவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும்.<br>• கட்டுரையின் பொருண்மை<br>• கலை வடிவம் / உருவாக்கம் | • நாட்டார் கலைக்களஞ்சியத்திற்குக் கலைவடிவங்கள் பற்றிக் கட்டுரைகள் தயாரிக்கிறார்கள்.<br>• தங்கள் ஊரில் நடைபெறும் நாட்டார் கலைகளைப் பதிவு (record) செய்கிறார்கள். |

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr>
<td>• தமிழகத்தைப் போலவே கேரளத்திலும் பல நாட்டார் கலை வடிவங்கள் உள்ளன</td>
<td>• நிகழ்த்து முறை<br>• முக்கியத்துவம்<br>• கட்டுரை வடிவம்<br>உரைக் குறிப்பு<br>தொடர்ந்து மாணவர்கள் குழுவாக 'யாரடா வெண்மணி தூணிலே நரசிம்மா...'' என்ற பாடப்பகுதியை வாசித்து, விவாதித்து சொற்பொழிவாற்றத்தக்க வகையில் உரைக்குறிப்பு தயாரிக்கிறார்கள். வகுப்பில் இன்றும் வாழும் தெருக்கூத்து' எனும் தலைப்பில் சொற்பொழிவு நடத்துகிறார்கள். மாணவர்கள் மதிப்பீடு செய்கிறார்கள்.<br>இதை ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும்.<br>• பேச்சுத் திறன்<br>• கருத்துத் தெளிவு<br>• உரையின் தன்மை<br>• தகவல்களின் சேகரிப்பு<br><br>ஒப்பீடு செய்தல்<br>ஆசிரியர் மாணவர்களிடம் நிரப்புக எனும் தலைப்பில் சொல் அட்டைகளை வழங்குதல் (அவை கேரள நாட்டார் கலைகள் தொடர்பானவையாக இருக்க வேண்டும்). மாணவர்கள் அவற்றைக் கண்டுபிடித்து விடைகளை எழுதுகிறார்கள். தமிழகத்தைப் போலவே கேரளத்திலும் பல நாட்டார் கலை வடிவங்கள் உள்ளன எனும் ஆசிரியரின் சிறு விளக்கத்தோடு மாணவர்கள் குழுவாகப் படையணி எனும் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள்; விவாதிக்கிறார்கள்.<br>படையணி, தெய்யம் பற்றிய காணொலிக் காட்சிகளை (Audio visual) இணையம் மூலம் மாணவர்களுக்குக் காண்பிக்கலாம்.</td>
<td>தெருக்கூத்தின் சிறப்புக்களை உரைகளாக எழுதுகிறார்கள் (வானொலி உரை கருத்தரங்க உரை)</td>
</tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | பின்னர் தெய்யம் மற்றும் படையணி பற்றிய குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.<br>மாணவர்கள் சுய மதிப்பீடு செய்கிறார்கள். பின்னர் இவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.<br>• ஒப்பீட்டு முறை<br>• கலைகளுக்கிடையிலான உறவுநிலை<br>• நிகழ்த்துமுறை<br><br>**குழுச் செயல்பாடு**<br>நாட்டார் கலைகளின் அழிவிற்கான காரணங்களைக் கண்டறிய நிகழ்த்துக் கலைஞர்களிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினா நிரலைக் குழுவாகத் தயார் செய்கிறார்கள். வகுப்பில் வெளியிடுகிறார்கள்.<br>குழுவும் ஆசிரியரும் இதை மதிப்பீடு செய்கிறார்கள்.<br>**கருத்தரங்கம் நடத்துதல்.**<br>'சமூகப் பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளின் பங்கு' எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்துகிறார்கள்.<br>**புகைப்படக்கண்காட்சி நடத்துதல்**<br>பல்வேறு மாநிலங்களின் நாட்டார் கலைகள்/விழாக்கள் பற்றி புகைப்படம் கண்காட்சி நடத்துகிறார்கள்.<br>நாட்டார் கலைகள்/விழாக்கள் பற்றித் தாங்கள் பதிவு செய்தவற்றை (record) புகைப்படக் கண்காட்சியின் ஒரு பாகமாகக் காண்பிக்கிறார்கள். | கருத்தரங்கக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.<br>புகைப்படக் கண்காட்சி நடத்துகிறார்கள். |

## அலகுப் பகுப்பாய்வு

ஆசிரியர் வகுப்பறையில் பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களின் உணவு/உடை/பழக்க வழக்கங்கள் கொண்ட நிழற்படங்களை மின்னொளிக்காட்சி (PPT) மூலமாகக் காண்பித்தல்.

- இவர்களை அடையாளம் காண முடிகிறதா?
- இவர்கள் எம் மாநிலத்தைச் சார்ந்தவர்கள்?
- மக்களுக்கிடையில் இவ்வகையான மாற்றங்கள் ஏற்படக் காரணம் என்ன?
- இம்மாற்றங்கள் உடனடியாக நிகழ்ந்திருக்குமா? போன்ற வினாக்களைக் கேட்டு, கலந்து ரையாடலைத் தொடங்குதல்.

**கலந்துரையாடலில் இடம்பெற வேண்டிய கருத்துகள்**

- இயற்கைச் சூழாலால் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- உணவு – கோதுமை – வட மாநிலங்கள், அரிசி – தென் மாநிலங்கள்
- காலச்சூழல்கள்
- பருவ மாற்றங்கள் – உடை – உடுத்தும் முறை
- பழக்க வழக்கங்கள் – சமூகங்களுக்கிடையிலான மாற்றங்கள்.
- வழிபாடுகள் / நம்பிக்கைகள் / நாட்டார் கலைகள் / விழாக்கள்
- மொழி பேச்சு வழக்கு / இலக்கிய வழக்கு

மாணவர்கள் கூறும் விளக்கங்களைக் கேட்ட பின்னர் 'பண்பாடு' எனும் கருத்தாக்கத்தினுள் வருதல்.

- பண்பாடு என்றால் என்ன?
- இச் சொல்லுக்கான விளக்கம் என்ன?
- பண்பாட்டின் வளர்ச்சி நிலைகள் என்னென்ன?

போன்ற வினாக்களுக்கு, மாணவர்களிடம் விளக்கம் கேட்டல். மாணவர்கள் கூறும் கருத்துக் களைக் கவனமாகக் கேட்டல்.

- அனுபவபங்களின் வெளிப்பாடு
- மனித குல ஒருமைக்கான உணர்வுகளை வளர்த்துதல்
- மரபு ரீதியாகத் தொடரும் பழக்கவழக்கங்கள்
-
-

மேலும் ஆசிரியர் பண்பாடு பற்றிய சில விளக்கங்களையும் வரையறைகளையும் கூறுதல். மாண வர்கள் இதுபோன்ற பல அறிஞர்களின் கருத்துகளையும் வரையறைகளையும் இணையம், செய் தித் தாள்கள், இதழ்கள் பண்பாடு பற்றிய நூல்கள் போன்றவற்றிலிருந்து சேகரிக்கிறார்கள்.

**பண்பாடு பற்றிய சில கருத்தாக்கங்கள்**

- பண்பாடு எனும் சொல் மனித சமூகத்தோடு மட்டும் தொடர்புடையது.
- பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கிறது.
- பண்பாடு எனும் கருத்தாக்கம் மக்களின் அறிவுசார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் படிநிலைகள் மூலம் வெளிப்படுவதேயாகும்.

**வரையறைகள் :**

- பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி.
- பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தைமுறைகளின் சேர்மம். அது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டும் உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது.
- மனிதனின் உடல்சாராத தகவமைப்பு பண்பாடு.
- பண்பாடு என்பதில் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச் சூழல், இதில் பொருள்சாராப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும்.
- பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும். – எட்வர்ட் பர்னட் டைலர்.

**பண்பாட்டின் உட்கூறுகள்**

**பொருள் சார் கூறுகள் (Material Components)**

மக்கள் அவர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருட்களும் பொருள்சார் கூறுகள் எனப்படும்.

- இயந்திரங்கள்
- வீட்டுப் பொருட்கள்
- அழகுப் பொருட்கள்
- தொழிற்கருவிகள்
- கட்டடங்கள்
- சாலைகள்

**அறிதிறன் சார் கூறுகள் (Cognitive Components)**

ஒரு பண்பாட்டின் அறிதல்சார் கூறுகள் என்பவை அப்பண்பாட்டைச் சேர்ந்தவர்களின் அறிதிறன் கூறுகளைக் குறிக்கும்.

- உலக வாழ்க்கை
- சுற்றுச்சூழல்
- நம்பிக்கைகள்
- கருத்துகள்
- வழக்காறுகள்

**நெறியியல் கூறுகள் (Normative Components)**

நெறியியல் கூறுகள் எனப்படுபவை அம்மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் கூறுகளைக் குறிக்கும். சமுதாயத்தில் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும். எவற்றைக் செய்யக்கூடாது, ஏன் செய்யக்கூடாது என்னும் விதிமுறைகளோடு தொடர்புடையவை இவை. அவற்றுள்

- விழுமியங்கள் (Values)
- நெறிமுறைகள் (Norms)
- விதிகள் (Laws)
- குடிவழக்குகள் (Folkways),
- வழக்கங்கள்
- பழக்கங்கள் முக்கியமானவை.

**சேகரித்த தகவல்களில் இடம்பெற வேண்டியவை**

- பண்பாடு பற்றிப் பலநாட்டு அறிஞர்களின் கருத்துக்கள்
- வரையறைகள்
- பண்பாடு பற்றிய பொன்மொழிகள்/பழமொழிகள்

## கற்றல் அடைவு

மாணவர்கள் தாங்களே பண்பாடு பற்றிய சில விளக்கங்களையும் வரையறைகளையும் உரு வாக்குகிறார்கள்.

- குறிப்புகள்
- விளக்கக் குறிப்புகள்
-

## பட்டியலிடுதல்

பண்பாடு பற்றித் தெளிவாக அறிந்துகொண்ட மாணவர்கள் தமிழர் பண்பாடு பற்றி அறிதல் மிக அவசியம். எனவே ஆசிரியர் மாணவர்களிடம் தமிழ் மக்களுக்கெனத் தனித்த பண்பாடு உண்டா என்ற வினாவுடன் கலந்துரையாடலைத் தொடங்குதல். மாணவர்கள் கூறும் விளக்கங் களைக் கேட்டல்.

**தமிழரின் பெருமையான பண்பாட்டுக் கூறுகள்**

- விருந்தோம்பல்
- உபசரிப்பு
- இயற்கை வழிபாடு

**விருந்தோம்பல்**

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (குறள் 90)
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்த வர்க்கு (குறள் : 86)

மேலும் சில விளக்கங்களைப் பெறத் "தமிழர் பண்பாடும் இலக்கியமும்" எனும் பாடப்பகு தியை வாசிக்கச் செய்தல். கருத்துக்களை விவாதிக்கிறார்கள்.

தமிழரின் பண்பாட்டுக் கூறுகளைப் பட்டியலிடுகிறார்கள்.

### தமிழர் பண்பாடும் இலக்கியமும் - பாடவிளக்கம்

தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்குரிய திருந்திய மனப்பான்மை எனப்படும். மாத்யூ அர்னால்டு ''பண்பாடு என்பது ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமூதாயத்தின் நலன்ககளைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் பக்குவ நிலையே ஆகும்'' என்கிறார். மேலும் அது வெளிப்படும் தன்மை குறித்தும் கூறியுள்ளார். குலத்தில் பிறந்தவர்களின் பண்பாட்டை அவர்கள் வாய்ச்சொல் காட்டும் என்கிறார் திருவள்ளுவர். தமிழர் உலகப் பற்று உடையவராகவும் பிறரை மதிக்கும் தன்மையுடையவராகவும் வாழ்ந்திருந்தனர். பாடப்பகுயில் உள்ள புறநானூற்றுப் பாடல்கள் இரண்டும் தமிழரின் பண்பாட்டைத் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன.

**பண்பாட்டுக் கூறுகள் சில**

- அறிவு, குணம் போன்றவற்றால் நிரம்பிய சமுதாயமே பண்பாடு மிகுந்த சமுதாயம்.
- தமிழர்கள் முற்காலத்தில் உலக அறங்களில் ஈடுபட்டிருந்தனர்.
- சமயப்பற்று உடையவர்கள்.
- தேசியப்பற்று உடையவர்கள்.
- பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர்.
- தனித்து உண்ணமாட்டார்கள்
- பழிபாவங்களுக்கு அஞ்சுவார்கள்.
- புகழுக்கு உயிரையும் கொடுப்பர்.
- பழிக்குப் பரிசாக உலகைக் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.
- பிறர் நலனையே என்றும் விரும்புவர்.
- உலகில் உள்ள எல்லோரையும் உறவினர்களாக எண்ணுவர்.
- நன்மையும் தீமையும் அவரவர் செயல்களின் பலன் என்ற நம்பிக்கையுடையவர்கள்.
- உலக இயல்போடு சேர்ந்து வாழ்பவர்கள்.

இதுபோன்று இயல்புகள் அனைத்தும் தமிழர்க்கே உரிய பண்பாடுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

பட்டியலிட்டவற்றை மாணவர்கள் குழுவிற்கு ஒருவர் என வகுப்பில் வாசிக்கிறார்கள். இதைக் குழுவாக மதிப்பீடு செய்யவேண்டும்.

- பண்பாட்டுக் கூறுகளின் தன்மை
- வரிசைப்படுத்துதலின் முறை
- கருத்துக் கோர்வை

இந்த மதிப்பீட்டைத் தொடர்ந்து ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் செயல்பாட்டையும் மதிப் பீடு செய்ய வேண்டும். பின்வரும் மதிப்பீட்டுக் குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.

- பேச்சாற்றல்
- கருத்துத் தெளிவு
- வெளியீட்டுத்திறன்

மாணவர் பற்றிய குறிப்புகளைத் திட்டக் குறிப்பேட்டில் (Teacher Planner) ஆசிரியர் பதிவு செய்ய வேண்டும்.

## கற்றல் அடைவு

'தமிழர் பண்பாடு' எனும் தலைப்பில் பத்திரிகைச் செய்தி (பத்திரிகைத் துணுக்குகள், குறிப்புகள், கட்டுரைகள்) எழுதுகிறார்கள்.

## விவாதம்

பண்பாட்டின் அடையாளங்களுள் மிக முக்கியமானவை விழாக்கள். மனித மனதிற்கு இன்பத்தை ஊட்டும் இவ் விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கம் என்ன? இதன் தேவை யாது? என்ற வினாக்களுடன் ஆசிரியர் வகுப்பறையில் கலந்துரையாடலைத் தொடங்குதல். மாணவர்களின் விளக்கங்களைக் கேட்டல். விழாக்களில் காணலாகும் இரு வகைகளை விளக்குதல்.

**விழாக்கள்**

குடும்பம் சார்ந்தவை — சமூகம் சார்ந்தவை

**குடும்பம் சார்ந்தவை**

- பிறந்தநாள் விழா
- திருமணவிழா
- புதுமனை புகுவிழா
- குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா

**சமூகம் சார்ந்தவை**

- தமிழ் வருடப் பிறப்பு
- விநாயக சதுர்த்தி
- நவராத்திரி
- சரசுவதி பூஜை
- தீபாவளி
- கார்த்திகை தீபம்
- தைப்பூசம்
- பொங்கல் விழா
- மகா சிவராத்திரி
- கொடை விழாக்கள்
- கோயில் விழாக்கள்

பின்னர்க் குழுவாகத் தாங்கள் கொண்டாடும் விழாக்களையும் அதில் காணலாகும் வகைகளையும் வரிசைப்படுத்துகிறார்கள். குறிப்பேட்டில் எழுதுகிறார்கள்.

## பாட விளக்கம்

மேலும் மங்கல வாழ்த்து, இந்திரவிழா போன்ற பாடப்பகுதிகளுக்கு ஆசிரியர் விளக்கமளித்தல்.

**சிலம்பு – மங்கல வாழ்த்து**

கோவலன், கண்ணகி என்றிருவரையும் அவர்தம் பெருமைமிகு பெற்றோர் ஒரு பெருநாளிலே திருமணக் கோலத்தில் காண விரும்பினர். பின்பு மங்கல மகளிரை யானைமீது ஏற்றி நகர் எங்கும் திருமணச் செய்தியைத் தெரிவித்தனர். திருமணத்தன்று முரசுகள் ஒலித்தன. அரசனது உலாப்போல வெண்குடைகள் எழுந்தன. மங்கலநாணும் ஊர்வலமாகச் சென்றது.

மாலைகள் பொருந்திய உச்சியுடன் கூடிய மண்டபம் அதில் நீலப் பட்டினாலான விதானத்தின்கீழ் அமைந்த அழகிய முத்துப் பந்தல், வானில் செல்லும் சந்திரன் ரோகிணியைச் சேரும் நல்ல நாளில், வானத்திலுள்ள ஒப்பற்ற நட்சத்திரமாகிய அருந்ததி போலும் கற்புடைய கண்ணகியைக் கோவலன், மிகவும் வயதான அந்தணன் வேதநெறிப்படி சடங்குகளை நிகழ்த்த மணந்தான். தீயினை இருவரும் வலம் வந்த காட்சியைக் காண்பவர் கண்கள் முன்பு செய்த தவம் தான் யாதோ?

அழகுடன் விளங்கும் மேனியையுடைய மகளிர் சிலர் கோட்டம் முதலான நகைச்சுவைப் பொருள்களை ஏந்தியும், சிலர் மணமலர்களைக் கொண்டு வாழ்த்துப் பாடியும் சிலர் ஓசிந்த பார்வையினராயும் நெருங்கி வந்தனர். சிலர் சாந்தினை ஏந்தியும் சிலர் அகில்புகை முதலான நறும்புகையை ஏந்தியும் சில அழகிய மாலைகளை ஏந்தியும் சிலர் சுண்ணப்பொடிகளை ஏந்தியும் நெருங்கி வந்தனர்; அரும்பிய புன்முறுவலுடன் கூடிய மகளிர் சிலர் விளக்கினை ஏந்தியும், சிலர் அணிகலன்களை ஏந்தியும், சிலர் முளைப்பாலிகையை ஏந்தியும், சிலர் பூரண கும்பம் ஏந்தியும் நெருங்கி வந்தனர்.

அப்பொழுது மலரணிந்த அடர்ந்த கூந்தலையுடைய அழகிய பொற்கொடி போன்ற மகளிர் சிலர், இவள் தன் காதலனைக் கண்ணினும் மனத்தினும் பிரியாதிருப்பாளாக; அவனும் இவளைப் பிணைந்த கை நெகிழாமல் இருப்பானாக; இருவரும் தீதின்றி நீடுவாழ்க! எனச் சில மலர்களைத் தூவி வாழ்த்தினர். பின் அழகிய இடமகன்ற பூமியே இருக்கும் அருந்ததி போன்ற கண்ணகியை நல்ல மங்கல அமளியில் (படுக்கையில்) ஏற்றினர்.

## இந்திரவிழா – பாடவிளக்கம்

'உலகம் திரியா ஓங்குயர் விழுச்சீர்'

நன்மக்களது ஒழுக்கம் வேறுபடாத மிக உயர்ந்த சீரிய புகழுடைய பல நாட்டினாராலும் புகழ்ந்துரைக்கப்படும் பழமை சான்ற புகார் நகரத்தின் நன்மை மேம்படும் பொருட்டு மிக மேம்பட்ட பொதிகை மலையில் உள்ள அரிய தவத்தையுடைய அகத்திய முனிவர் உரைத்தருள வானத்தில் அடைகின்ற மதில்களை அழித்த வீரவளை அணிந்த தோள்களை உடைமையின் தூங்கெயிலறிந்த தொடித்தோட் செம்பியன் எனப்பெயர் பெற்ற சோழ மன்னவன் வானவர்க்கரசனாகிய இந்திரனை வணங்கி நின்று நிலவுலகின்கண் என்னுடைய சிறந்த நகரத்தில் மேலோரும் விழையுமாறு விழாவெடுத்தலை மேற்கொண்ட இருபத்தெட்டு நாளினும் ஆண்டு வந்து இனிதே தங்க வேண்டும் என வேண்ட வானவர் தலைவன் அதற்குற்பட்டதனைத் தெளிந்த நூல் கேள்வினை உடையார் பிழையார் ஆதலினால் மெய்பொருள் உணர்த்துகின்ற நூல்வகை உலகியல், நல்ல தத்துவப்பொருள் முத்தி என்னும் இவ்வகைகளை அவரவர் இயற்கைக்கேற்ப உணர்த்துகின்ற சமயவாதியரும் தம்முடைய நெறியில் கைதேர்ந்த காலங்களை எண்ணிக்கூறும் சோதிடரும் இந்நகரை விட்டு நீங்காதவராய் தமது பேரொளியினை மறைந்து மக்கள் கண்களால் காணும் அளவான வடிவினை ஆக்கிக் கொண்ட தேவரும் பலவிடத்தும் நின்றும் போந்து ஒருங்கு கூடிய மொழி வேறுபட்ட மக்களும் அரசருக்குரிய அமைச்சராதி ஐந்து பெரும் குழுவினரும் எண்பெருங்கூட்டத் தினரும் வந்து ஒன்றாகக்கூடி.

தேவர்நகரமாகிய அமராவதியில் கொடி எடுத்த தேர்ப்படையினையுடைய முகுந்த மன்னருக்குப் பகைவரால் நேர்ந்த துன்பத்தினை நீக்கிய நாளங்காடிப் பூதம் விழாவெடுத்தலை மறந்தால் சினத்தால் மடிக்கப்பெற்ற சிவந்த வாயில் வலியபறக்கள் விளங்க இடியொலி போன்ற முழக்கத்துடன் துன்பம் செய்யும் இம்முதுநகரில் அல்லவை செய்யும் பாவிகளைக் கையில் கொண்ட பாசத்தால் பிணித்துப் புடைத்து உண்ணும் சதுக்கபூதமும், பகைமை கொள்ளும். மிகப்பெரிய புவியில் உள்ள அரசர்கள் எல்லாரும் வந்து சேருவதற்கு ஏதுவாகிய இந்திரனுக்குச் செய்யும் விழாவினை தொடங்குக என்று சொல்ல வச்சிரப்படை நிற்கும் கோயிலுள்ள விழாமுரசினை கச்சையை அணிந்த யானையின் பிடரினிடம் ஏற்றி வெற்றியையுடைய

நல்ல காளையின் தோலால் கோர்க்கப்பட்டதும் கூற்றுவனை அழைப்பதும் குருதிப்பலி கொள்ளும் விடுப்பத்தினை உடையதுமாகிய வீருமுரசத்தைக் குறுந்தடி கொண்ட அறைகின்ற தொல்குடிப் பிறந்த வள்ளுவன் திருமகளும் விரும்புகின்ற தொன்னகர் வாழ்க என்று துதித்து மேகம் மாதம் மும்முறை மழை பொழிக அரசன் கோள்கள் நிற்கும் நிலைகுலையாமைக்குக் காரணமாகிய செங்கோலை உடையவனாககு என வாழ்த்தி நாவலந் தீவிற்குச் சாந்தியாகிய இந்திரவிழாவினைக் கொண்டாடும் நாட்களில் ஆயிரம் கண்களை உடைய புரந்தரனோடு ஆண்டுள்ள நால்வகையாகப் பிரிக்கப்படும் முப்பத்து மூவராகிய தேவரும் நன்மைசால் சிறப்புடையராகிய பதினென் கணங்களும் இந்நகரத்தினை நினைத்து கரிகால் பெருவளத்தான் என்னும் மன்னர் பெருமான் இந்நகரிலிருந்து நீங்கி வடதிலையில் போருக்குச் சென்றபோது இப்பதி வறுமையுடைய தன்மை ஆனது போல பொன்னுலகமும் வறுமை அடையும் என்றபது பழமையை அறிந்தோர்களால் துணியப்பட்ட பொருளாதலின் தோரணங்களை உடைய வீதிகளிலும் குற்றமற்ற மன்றங்களிலும் நிறைகுடங்களும் பொன்காலிகைகளும் பாவை விளக்குகளுமாகிய மங்கலப்பொருள் பலவற்றையும் ஒழுங்காகப் பரப்புங்கள். காய்ந்த குலைகளுடன் கூடிய பாக்கு மரமும் வாழை மரமும் வஞ்சி மரமும் மலர்களை உடைய கொடியும் கரும்பும் என்னுமிவற்றை நடுவீர். வரிசையாக உள்ள திண்ணைகளிலிருக்கும் பசும் பொன்னாலாகிய தூண்களில் முத்துமாலைகளை முறையாகத் தொங்க விடுங்கள். விழாக்கள் நிறைந்த மூதுரின் வீதிகளிலும் மரத்தடிகளிலும் பழைய மணலை நீக்கி புதிய மணல் பரப்புமின். துகில் கொடிகளையும் காம்பினால் ஊன்றப்படும் கொடுகளையும் காடுங்கைகளை உடைய மாடங்களிலும் வாயில்களிலும் சேர்ப்பீராக. இமைத்தலில்லாத நெற்றித் திருக்கண்ணை உடைய சிவபெருமான் முதலாக இப்பதியில் வாழ்கின்ற சதுக்கப்பூதம் வரையிலுள்ள கடவுள்களுக்கு வெவ்வேறு வகையான சிறப்புக்களை வெவ்வேறு வகையில் செய்யும் நெறியினை அறிந்த முறைமையினை உடைய குளிர்ந்த மணலினை உடைய பந்தல்களிலும் பலரும் தங்கும் அம்பலங்களிலும் நன்றாகிய அறிவுரையை அறிந்து சேருங்கள். தத்தம் சமயத்திற்கேற்ற பொருள்களைக் குறித்து சபதம் செய்து வாதிடும் சமயவாதிகள், பட்டி மண்டபத்தில் உரிய பகுதியறிந்து ஏறுவீராக!

எங்கும் வளம் சுரப்பதாகும் 62–72

பகைவரோடாயினும் சினமும் பூசலும் கொள்ளாது அவரை விட்டு அகல்வீராக! வெண்மையான மணல் குன்றுகளிலும், மலர் நிறைந்த பொழில்களிலும், ஆற்றிடைக் குறைகளிலும், மரங்கள் நெருங்கி நிழல் செய்யும் நீர்த் துறைகளிலும், தேவரும் மக்களும் வேறுபாடின்றிக் கலந்து உலாவும் விழாக் காலமான இருபத்தெட்டு நாட்களிலும் இவற்றை நன்கு ஆராய்ந்து செய்வீராக! என்று, விளங்கும் வாய் வீரரும் தேரும் குதிரையும் யானையும் சூழ்ந்து வர, முரசினை அடித்து, மேற்குறித்த செய்திகளை நகருக்க அறிவித்தான். வள்ளுவன் அவன், நாட்டில், பசியும் நோயும் பகையும் நீங்கி, மழையும் வளமும் பெருக! என வாழ்த்தினான். இவ்வாறு புகாரின் அகநகரான பட்டினப்பாக்கத்தில் இந்திர விழா பற்றிய செய்தியை வள்ளுவன் முரசறைந்து அறிவித்தான்.

சமயத்திற்கேற்ற பொருள்களைக் குறித்து சபதம் செய்து வாதிடும் சமயவாதிகள், பட்டி மண்டபத்தில் உரிய பகுதியறிந்து ஏறுவீராக!

எங்கும் வளம் சுரப்பதாகும் 62–72

பகைவரோடாயினும் சினமும் பூசலும் கொள்ளாது அவரை விட்டு அகல்வீராக! வெண்மையான மணல் குன்றுகளிலும், மலர் நிறைந்த பொழில்களிலும், ஆற்றிடைக்

குறைகளிலும், மரங்கள் நெருங்கி நிழல் செய்யும் நீர்த் துறைகளிலும், தேவரும் மக்களும் வேறுபாடின்றிக் கலந்து உலாவும் விழாக் காலமான இருபத்தெட்டு நாட்களிலும் இவற்றை நன்கு ஆராய்ந்து செய்வீராக! என்று, விளங்கும் வாய் வீரரும் தேரும் குதிரையும் யானையும் சூழ்ந்து வர, முரசினை அடித்து, மேற்குறித்த செய்திகளை நகருக்க அறிவித்தான். வள்ளுவன் அவன், நாட்டில், பசியும் நோயும் பகையும் நீங்கி, மழையும் வளமும் பெருக! என வாழ்த்தினான். இவ்வாறு புகாரின் அகநகரான பட்டினப்பாக்கத்தில் இந்திர விழா பற்றிய செய்தியை வள்ளுவன் முரசறைந்து அறிவித்தான்.

**பண்பாட்டுக் கூறுகள்**

- விழா கொண்டாடும் முறை / காரணம்
- பிறருக்கு அறிவித்தல்
- சடங்கு முறைகள்
- சமைக்கப்படும் உணவுகள்
- உடைகள் உடுத்தும் முறை

மங்கல வாழ்த்து, இந்திரவிழா எனும் விழாக்களில் காணலாகும் பண்பாட்டுக் கூறுகளை மாணவர்கள் வரிசைப்படுத்துகிறார்கள்.

**இந்திர விழா**

- இருபத்தி எட்டு நாட்கள் கொண்டாடப்பட்டது.
- ஐம்பெருங்குழு, எண்பேராயம், சமயக் கணக்கர் போன்ற அனைத்து மக்களும் ஒன்று கூடி இருந்தனர்.
- விழா கொண்டாடுவதற்கான ஒரு புராணக்கதை கூறப்படுகிறது.
- நகரம் அலங்கரித்தல்
  1. தோரணம் கட்டுதல்
  2. பாவை விளக்குகள் ஏற்றுதல்
  3. பாக்கு, வாழை மரங்களை நடுதல்
  4. புதிய மணலைப் பரப்புதல்
- பல்வேறு கடவுளர்களுக்கும் முறையான வழிபாடுகளைச் செய்தல்.
- பசி, பிணி, பகை நீங்குக என வாழ்த்துதல்
- முரசறைவித்தல்

**மங்கல வாழ்த்து**

- நல்ல நாள் குறித்தல்
- மகளிரை யானை மீது ஏற்றி முரசறைந்து நகருக்குத் திருமணச் செய்தி அறிவித்தல்.
- பெரிய மண்டபம் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டது.
- வேத நெறிப்படி கோவலன் கண்ணகிக்கு அந்தணன் வழிகாட்ட மங்கலநாண் அணிவித்தான்.
- மகளிர் பலர் சுண்ணப்பொடி, அகில்புகை, மலர்மாலை, விளக்கு போன்ற வற்றைக் கைகளில் ஏந்தி இருந்தனர்.
- இணைந்த கைகள் பிரியாமல், காதலர்கள் பிரியாமல் வாழ்க என்று அனைவரும் வாழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்கள் தாங்கள் வரிசைப்படுத்திய விழாக்களில் காணலாகும் பண்பாட்டுக்கூறுகளைக் குழுவாக விவாதம் செய்து குறிப்புகள் எழுதுகிறார்கள்.

எ.கா:

**ஓணவிழா**

- கொண்டாடுவதற்கான காரணங்கள்
- சமைக்கப்படும் உணவுகள்
- ஓண விழாவின் ஒவ்வொரு நாளின் சிறப்பு.

(இது போன்று பொங்கல் / தீபாவளி போன்ற விழாக்கள்)

மாணவர்கள் எழுதும் குறிப்புகளில் விழாக்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுதல் வேண்டும்.

**மதிப்பீடு**

குறிப்புகளை மாணவர்களின் குழுக்கள் மதிப்பீடு செய்ய வேண்டும்.

| குழு மதிப்பீட்டிற்கான அட்டை | | |
|---|---|---|
| | கட்டுரை | |
| | உண்டு | இல்லை |
| விழாக்களின் வகை<br>விழாவிற்கான காரணம்<br>கருத்துகளின் வரிசை<br>கொண்டாட்ட முறை | | |

குழு மதிப்பீடு செய்தவற்றை ஆசிரியர்

- தகவல்களைத் திரட்டுதலின் முறை
- கருத்துக்களை வரிசைப்படுத்துதல்
- வெளியீட்டு முறை
- குழுச் செயல்பாட்டுமுறை

எனும் மதிப்பீட்டுக் குறிப்புகள் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

மாற்றுத்திறனாளி மாணவர்கள் தாங்கள் கொண்டாடும் விழாக்களை வரிசைப்படுத்த உதவலாம்.

## கற்றல் அடைவுகள்

- பண்பாட்டுக் கூறுகளை வெளிக்காட்டும் வகையில் விழாக்களுக்கான வாழ்த்து அட்டைகள் தயார் செய்கிறார்கள்.
- வாழ்வியல் களஞ்சியத்திற்கு விழாக்கள் பற்றியக் குறிப்புகள் தயார் செய்கிறார்கள்.

## குழுக் கலந்துரையடல்

ஆசிரியர் பல்வேறு தமிழகக் கலைகளின் நிழற்படங்களை மின்னொளிக்காட்சி (PPT) மூலமாகக் காண்பித்தல். அவற்றை மாணவர்கள் நாட்டார் கலைகள் என்றும், செவ்வியல் கலைகள் என்றும் வகைப்படுத்துகிறார்கள்.

## கலைகளின் வகைகள்

**சிலப்பதிகாரம் கலைகளை அறுபத்தி நான்கு என்று கூறுகிறது.**

'எண்ணெண் கலையும் இசைத்துடன் போக' (சில : 8 : 64)

ஆயகலைகள் அறுபத்துனான்கு என்பது வழக்கு. இவற்றை ஏழாகப் பிரித்துள்ளார் க.த.திருநாவுக்கரசு.




மேலும் அழகுக்கலைகளை பின்வருமாறு பகுத்துக் கூறுகின்றனர்.




| செவ்வியல்கலைகள் | நாட்டார்கலைகள் |
|---|---|
| • பரத நாட்டியம்<br>• கர்நாடக இசை<br>• | • மயிலாட்டம்<br>• ஒயிலாட்டம்<br>• |

பின்னர் இரு குழுவாகப் பிரிந்து இக்கலைகளில் இவ்வகையான மாற்றங்கள் ஏற்படக் காரணம் என்ன என்பதைக் கலந்துரையாடி வேறுபாடுகளை வகைப்படுத்துகிறார்கள்.
அவற்றைக் குறிப்புகளாக எழுதுகிறார்கள்,
புகைப்படங்களைத் தொகுக்கிறார்கள்

வேத்தியல், பொதுவியல் என்று கூறப்பட்ட சொல்லாட்சி தற்காலத்தில் செவ்வியல் கலை, நாட்டார் கலை என்ற சொற்களால் சுட்டப்படுகின்றன.

**செவ்வியல் கலைகளின் தன்மைகள்**

- திட்டவட்டமான இலக்கண வரையறைகள் கொண்டவை.
- தீவிர / முறையான / தொடர்ச்சியான பயிற்சியால் மட்டுமே இக்கலைகளில் அறிவைப் பெற முடியும்.
- நெகிழ்வற்ற தன்மை உடையவை.
- அரங்கம் மற்றும் கோவில்களில் நிகழ்த்தப்படுபவை.

**நாட்டார் நிகழ்த்துக் கலைகளின் தன்மைகள்**

- வட்டாரத் தன்மை கொண்டவை.
- மரபு வழிப்பட்ட பண்பாட்டு எல்லைகளையும் பார்வையாளர்களையும் கொண்டவை.
- குறிப்பிட்ட சூழலில் நிகழ்த்தப்படுபவை.
- சமயச் சடங்கியலோடு தொடர்புடையவை.
- நாட்டார் தெய்வத்தோடும், நம்பிக்கையோடும் தொடர்புடையவை.
- நிகழ்த்துனர் - பார்வையாளர் இவர்களுக்கிடையில் மிக நெருங்கிய தொடர்புண்டு.
- நாட்டார் கலைகளில் நிகழ்த்தப்படும் கதை, பாடல்கள், உரையாடல்கள் என்பன நிலையானவை அல்ல. இடம் / காலம் / சடங்கு என்பதற்கேற்ப மாறுபடும்.
- கதை நிகழ்வுகள் மாறுபடாமல் இருப்பதால் என்ன நிகழ்த்துகிறார்கள் என்பதுதான் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.
- நெகிழ்வுத்தன்மை கொண்டவை.

## மதிப்பீடு

குறிப்புகளை மாணவர் சுய மதிப்பீடு செய்தல் வேண்டும்.
மாணவர் சுய மதிப்பீட்டைத் தொடர்ந்து ஆசிரியர் மதிப்பீட்டுக் குறிப்புகள் அடிப்படையில் இவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும்.

- வடிவங்கள்
- வகைமைப்படுத்துதலின் முறை
- வேற்றுமைகள்
-

***சுயமதிப்பீட்டுப் படிவம்***

| கட்டுரை | | |
|---|---|---|
| **கருத்துகள்** | **உண்டு** | **இல்லை** |
| • கலைகள் | | |
| • வடிவங்கள் | | |
| • வேறுபாடுகளின் தன்மை | | |
| • நிகழிடம் | | |
| • முக்கியத்துவம் | | |

## *கற்றல் அடைவு*

மாணவர்கள் கலைகளின் வகைமைகள் அடிப்படையில் அவற்றிற்கான புகைப்படங்களைத் தொகுக்கிறார்கள்.

## *குழுக் கலந்துரையாடல்*

தமிழகம் சார்ந்த ஆடல்/பாடல்/நாடகம்/ கூத்து என்னும் காட்சிகளை ஆசிரியர் வகுப்பறையில் காண்பித்தல். இக்கலைவடிவங்கள் எதனால் வேறுபடுகின்றன என்பது பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடல் நிகழ்த்துதல்.

**கலை வடிவ வேறுபாடுகள்**

- நிகழ்த்தும் தன்மை (பாடல் / ஆடல் / கூத்து)
- உள்ளடக்கம் (பாடுபொருள் / புராணம் / கதைகள்)
- நிகழிடங்கள் (கோவில் / பொது இடங்கள்)
- கால அளவு (சில மணிநேரம் / முழு இரவு)

| பாட்டு | ஆட்டம் |
|---|---|
| • வில்லுப்பாட்டு<br>• உடுக்கடிப்பாட்டு<br>• நாட்டார் பாடல்கள் (தாலாட்டு முதல் ஒப்பாரி வரை) | • கரகாட்டம்<br>• பொய்க்கால் குதிரை<br>• தப்பாட்டம்<br>• மயிலாட்டம் |
| **கூத்து** | **நாடகம்** |
| • கணியான் கூத்து<br>• பாவைக்கூத்து<br>• தெருக்கூத்து | • வாசிப்பு நாடகம் |

## *நாட்டார் கலை வடிவங்கள்*

### 1. கருவி இசை ஆட்டங்கள்

கருவி இசைக்கேற்ப ஒருவரோ பலரோ ஒப்பனையுடன் ஆடும் ஆட்டங்கள் இவ்வகையில் உட்படுத்தப்படுகின்றன. கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தப்பாட்டம், மயிலாட்டம்.

### 2. பாட்டு ஆட்டங்கள்

கருவி இசையோடு பாடல்கள் பாடிக் கொண்டு அல்லது பிறர் பாடும் பாடல்களுக்கேற்ப ஆடும் ஆட்டங்கள் இவ்வகையில் அடங்கும்.
குறவன் குறத்தி ஆட்டம், கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கைச்சிலம்பாட்டம்

### 3. அரங்கக் கலைகள்

மரபு வழியாக வழங்கிவரும் ஏதேனும் ஒரு கதையை அடிப்படையாக வைத்து அக்கதையில் வரும் மாந்தர்களாக வேடம் புனைந்துகொண்டு கருவி இசையின் துணையுடன் ஆடியும் / பாடியும் / பேசியும் / நடித்தும் அரங்கத்தில் நிகழ்த்தக் கூடிய கலைகள் அரங்கக் கலைகள் எனப்படுகின்றன. தெருக்கூத்து, கணியான் கூத்து, பாவைக் கூத்து போன்றவை அரங்கக் கலைகளாகும்.

### 4.கதைகூறல்

பல்வேறு இசைக்கருவிகளின் துணையுடன் பாடலாகவும், வசனமாகவும் மக்கள் முன் கதைகூறும் பழக்கம் மரபாக பின்பற்றப்பட்டு வருகிறது. வில்லுப்பாட்டு, உடுக்கையடிப் பாட்டு போன்றவை இம்முறையில் நிகழ்த்தப்படுபவை.

**குறிப்பில் இடம் பெற வேண்டிய கருத்துகள்**

- நிகழிடம்
- நிகழ்த்துபவர்கள்
- நிகழ்த்துகளின் தேவை
- நிகழ்த்தும் முறை
- நிகழும் காலம்
- காலம் தோறும் ஏற்பட்ட மாற்றங்கள்.

**குழு மதிப்பீட்டுப் படிவம்**

| கட்டுரை | | |
|---|---|---|
| **கருத்து** | **உண்டு** | **இல்லை** |
| • கட்டுரை வடிவம் | | |
| • முன்னுரை | | |
| • கருத்துத் தெளிவு | | |
| • மொழிநடை | | |
| • முடிவுரை | | |

மேலும் அக்குறிப்புகள் அடிப்படையில் கட்டுரைகள் எழுதுகிறார்கள். இவற்றை மாணவர்கள் குழுவிற்கு ஒருகலை வடிவம் என்னும் முறையில் அதைப் பற்றி விரிவாகக் கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.

## மதிப்பீடு

இவற்றை மாணவர்கள் குழு மதிப்பீடு செய் கிறார்கள்.

இக்கட்டுரைகளை ஆசிரியர் பின்வரும் மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

- கட்டுரையின் பொருண்மை
- கலைவடிவம் / உருவாக்கம்
- நிகழ்த்து முறை
- முக்கியத்துவம்
- கட்டுரையின் வடிவம்
- மொழிநடை

## கற்றல் அடைவுகள்

- நாட்டார் கலைக் காஞ்சியத்திற்குக் கலைவடிவங்கள் பற்றிக் கட்டுரைகள் தயாரிக்கிறார்கள்.
- தங்கள் ஊரில் நடைபெறும் நாட்டார் கலைகளைப் பதிவு (record) செய்கிறார்கள்.

## உரைக் குறிப்பு

மாணவர்கள் "யாரடா வெண்மணி தூணிலே நரசிம்மா..." என்ற பாடப்பகுதியைக் குழுவாக வாசித்துக் கலந்துரையாடுகிறார்கள். கலந்துரையாடல் கருத்துகளைச் சொற்பொழிவாற்றுவதற் கான உரையாகத் தயார்செய்கிறார்கள்.

### பாட விளக்கம்

தமிழக நாட்டார் கலைகளுள் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது தெருக்கூத்து. இதனை நிகழ்த்துவதில் வடக்கத்திப் பாணி, தெற்கத்திப்பாணி எனும் இருவகைகள் உள்ளன. அவற்றுள் வடக்கத்திப் பாணியில் தெருக்கூத்தை நிகழ்த்துவதில் புரிசை கண்ணப்பதம்பிரான் குழு மிகவும் பெயர்பெற்றது. அவருடைய மகன் சம்பந்ததம்பி ரானின் நேர்காணல் நம் பாடப்பகுதியாக உள்ளது.

தொடர்ந்து ஐந்து தலைமுறைகளாகப் புரிசையில் தம்பிரானின் குழு தெருக்கூத்தை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. தெருக்கூத்திற்கு முன்பு இவர்கள் பாவைக் கூத்தை நடத்தினர். தெருக்கூத்து பற்றி அவர்தரும் சில செய்திகள்.

தெருக்கூத்தில் காலம்தோறும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் பெரும்பாலும் மகாபாரதக்கதை மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. தற்பொழுது இராமாயணம், தெனாலி ராமன் கதை, பிற நாட்டுக் கதைகள் என பலவும் நடத்தப்படுகின்றன. நவீன நாடகத்தின் தாக்கம் இக்கூத்தில், பயிற்சிகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதைச் சிலர் கட்டைக் கூத்து, டிராமா, நாடகம் என்றெல்லாம் கூறுகின்றனர்.

தெருக்கூத்தின் பிரதியை இக்குழுவினரே உருவாக்குகின்றனர். கதைகளுக்கேற்ப பாடல்களும் மெட்டும் அமைக்கப்படுகின்றன. இக்கலைக்கென ஆபரணங்கள், ஒப்பனைகள் உள்ளன. அவை கதை மாந்தர்களுக்கு ஏற்ப மாறுபடும், கட்டியக்காரன் மிக முக்கியமான கதை மாந்தராக உள்ளான். இசைக் கருவிகளில் முக்கியமாக வடக்கத்தி பாணிக்கு மட்டும் முகவீணை பயன்படுத்தப்படுகிறது.

கோயில் விழாக்கள், இறப்புச் சடங்கு போன்றவற்றிக்குத் தெருக்கூத்து நடத்தப் படுகிறது. தெருக்கூத்தில் பார்வையாளருக்கும், நடிகருக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. தற்காலத்தில் இக்கலை வளர்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

**உரைக் குறிப்புகள்**

- தெருக்கூத்தின் சிறப்புகள்
- நடிகர்கள்
- பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்
- தெருக்கூத்தை நிகழ்த்தும் முறை
- கதை
- தற்காலப் போக்குகள்

பின்னர் வகுப்பில் 'இன்றும் வாழும் தெருக்கூத்து' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்து கிறார்கள்.

### மதிப்பீடு

சொற்பொழிவிற்கான ஏற்பாட்டை மாணவர்களே செய்யவேண்டும். அவர்களது ஒவ்வொரு செயல்பாட்டையும் ஆசிரியர் தொடர்மதிப்பீடு செய்யவேண்டும்.

**தொடர் மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- தலைமைப் பண்பு
- ஒருங்கிணைப்பு
- நிகழ்ச்சி அமைப்பு முறை
- பொதுமைப் பண்பு

சொற்பொழிவை மாணவர்கள் குழு மதிப்பீடு செய்கிறார்கள்.

| சொற்பொழிவிற்கான குழு மதிப்பீட்டுப் படிவம் | | |
|---|---|---|
| கட்டுரை | | |
| | உண்டு | இல்லை |
| • பேச்சாற்றல்<br>• தெளிவான உச்சரிப்பு<br>• கருத்துத் தெளிவு<br>• சரியான தொடக்கமும் முடிவும்<br>• குறிப்பிட்ட கால அளவு<br>• மேற்கோள்களின் பயன்பாடு<br>• புதிய தகவல்கள் | | |

தொடர்ந்து ஆசிரியர் மதிப்பீட்டுக் குறிப்புகள் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்

- பேச்சுத்திறன்
- உரையின் தன்மை
- கருத்துத் தெளிவு
- புதிய தகவல்களின் சேகரிப்பு

## கற்றல் அடைவு

தெருக்கூத்தின் சிறப்புகளை உரைகளாக (வானொலி, உரை, கருத்தரங்க உரை) எழுதுகிறார்கள்.

## ஒப்பீடு செய்தல்.

ஆசிரியர் மாணவர்களிடம் நிரப்புக எனும் தலைப்பில் சொல் அட்டைகளை வழங்க வேண்டும்.

| சொல் அட்டை | நிரப்புக: | |
|---|---|---|
| | • ப ___ ய ___ | • **ப**டை**ய**ணி |
| | • தெ ___ ___ ம் | • தெ**ய்ய**ம் |
| | • ___ த ___ ளி | • **க**த**க**ளி |
| | • கூடி ______ ட ___ | • கூடி**யாட்ட**ம் |
| | • ___ ___ டன் ___ ___ ளல் | • **ஓட்**டன் **துள்**ளல் |

மாணவர்கள் விடுபட்ட எழுத்துகளைக் கண்டுபிடித்து விடைகளை எழுதுகிறார்கள். பின்னர் இச்சொற்களின் விளக்கங்களை மாணவர்களிடம் கேட்டல்.

தொடர்ந்து தமிழகத்தைப் போலவே கேரளத்திலும் பல நாட்டார் கலைகள் உள்ளன. அவற்றைப் பற்றி மாணவர்களுக்குச் சிறுவிளக்கம் கொடுத்தல். பின்னர் மாணவர்கள் குழுவாகப் 'படை யணி' எனும் பாடப்பகுதியை வாசிக்கிறார்கள். கருத்துகளை விவாதிக்கிறார்கள். பின்னர் தெய் யம், படையணி (இணையம் மூலம், காணொலிக் காட்சிகளைக் காண்பித்தல்) எனும் இரு கலை களையும் ஒப்பிட்டு, ஒப்பீட்டுக் குறிப்புகள் தயார் செய்கிறார்கள்.

**பாட விளக்கம் - படையணி**

படையணி கேரளத்துக் கோயில் விழாக் காலங்களில் நடன வழிபாடாக நடத்தப்படும் ஒரு கிராமியக் கலைவடிவமாகும். இது கேரளத்தில் குறிப்பாக பத்தனந்திட்டை, ஆலப்புழை போன்ற இடங்களில் அதிகமாகவும் கொல்லம், கோட்டயம் போன்ற மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் திருவிழாக் காலங்களில் நடத்தப்படுகிறது.

படையணி நடனம் ஆடுபவர் பூமியிலிருந்து வானத்தைத் தொட முயற்சி செய்கிறார் என்றும் வானத்திலும் மலையின் உச்சியிலும் உறையும் தெய்வங்களின் அருகில் சென்று அருள் பெற்று வருகிறார் என்றும் நம்பப்படுகிறது.

இந்த நடனத்தின்போது வாசிக்கப்படும் தாளங்கள் ஏற்படுத்தும் ஓசைகளை இதர கலைவடிவங்களில் கேட்க முடியாது. விழாவின்போது கோலங்களைத் தாங்கி வருபவரின் அருகில் ஒரு சிலர் சில சிரிப்பூட்டும் முக மூடிகளை முகங்களில் அணிந்து கொண்டு பார்வையாளர்களிடம் நகைச்சுவையாகப் பேசி அவர்களைச் சிரிக்க வைக்கிறார்கள். இத்துடன் பல நகைச்சுவைக் கதைகளும் கூறப்படுகின்றன. இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை வலுப்படுத்துவதே படையணி நடன வழிபாடு. பிப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரை இந்தப் படையணி நடன வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. படையணி நேரில் சென்று பார்ப்பவர்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும் ஒரு விழாவாகும்.

| தெய்யம் | படையணி |
|---|---|
| • தெய்வங்களின் வேடங்களைப் புனைந்து ஆடுதல்.<br>• சற்று உயரம் குறைந்த தலை யணிகள் காணப்படும்.<br>• தனியாக ஆடுதல்.<br>• சிவப்பு அதிகமாகவும், கருப்பு, வெள்ளை வண்ணங்கள் குறை வாகவும் காணப்படும். | • தெய்வத்தின் உருவத்தைப் பாக்கு மரத்தின் பாளைகளால் செய்து அதன் மேல் பல வண்ணங்களைத் தீட்டுதல்<br>• உயரமான கோலங்கள் காணப் படும்<br>• கூட்டமாக ஆடுதல்<br>• சிவப்பு, மஞ்சள் வண்ணங் களால் அலங்கரிக்கப்படுதல். |

**மதிப்பீடு**

ஒப்பீட்டுக் குறிப்புகளை மாண வர்கள் சுய மதிப்பீடு செய்கிறார் கள்.

இவற்றை ஆசிரியர்

- ஒப்பீட்டு முறை
- கலைகளுக்கிடையிலான உறவு நிலை
- பிற பண்பாடுகள் பற்றி அறி யும் ஆர்வம்

எனும் மதிப்பீட்டுக் குறிப்புகள் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

| சுய மதிப்பீட்டுப் படிவம் | | |
|---|---|---|
| கட்டுரை | | |
| | உண்டு | இல்லை |
| • கலைகளின் வடிவம்<br>• ஒப்புமை<br>• நிகழ்த்துமுறை<br>• ஒப்பீட்டு முறை<br>• கலைகள் பற்றிய புரிதல்<br>• பிறமொழி அறிவு | | |

மாற்றுத்திறனாளி மாணவர்கள் நாட்டார் கலைகளின் ஒலி-ஒளிக் காட்சிகளைக் காணவும், கேட்கவும் ஆசிரியர் உதவவேண்டும்.

## கற்றல் அடைவு

- பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த நாட்டார் கலைகளை இணையம் மூலம் தேடித் தொகுக்கிறார்கள்.

## குழுச் செயல்பாடு

மாணவர்கள் அனைவரும் நாட்டார் கலைகள் தற்காலத்தில் அழிந்து வருவதற்கான காரணங்களைக் கண்டறிதல் மிக அவசியம். எனவே அவ்வுணர்வைத் தூண்டும் வகையில் நாட்டார் நிகழ்த்துக் கலைஞர்களிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரலைத் தயாரிக்கச் செய்ய வேண்டும். மாணவர்கள் குழுவாகக் கலந்துரையாடி வினாநிரலைத் தயார்செய்கிறார்கள்; வகுப்பில் வாசிக்கிறார்கள்.

**வினாநிரலில் இடம் பெற வேண்டிய கருத்துகள்**

- நிகழ்த்துனரின் அனுபவம்
- நிகழ்த்தும் காலகட்டம்
- பயிற்சி முறை
- பயிலும் மற்றும் பயிற்றும் முறை
- ஈடுபாடு
- தற்கால வளர்ச்சி / அழிவிற்கான காரணமாக அவர் கருதுபவை
- கலையில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள்.

## மதிப்பீடு

வினாநிரலை மாணவர்கள் குழுவாக மதிப்பீடு செய்கிறார்கள்.

குழு மதிப்பீட்டைத் தொடர்ந்து ஆசிரியர்,

- வினாக்களின் பொருத்தம்
- தரமான வினாக்கள்
- மொழிநடை
- கருத்துத் தெளிவு

எனும் மதிப்பீட்டுக் குறிப்புகள் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

| வினாநிரல் மதிப்பீட்டுப் படிவம் | | |
|---|---|---|
| கட்டுரை | | |
| கருத்து | உண்டு | இல்லை |
| • தொடக்கம் | | |
| • கருத்துத் தொடர்பு | | |
| • நிகழ்த்துனரின் அனுபவம் | | |
| • கலையின் வளர்ச்சிநிலை | | |
| • தற்காலப் போக்கு | | |

## கற்றல் அடைவு

தங்கள் ஊரிலுள்ள அல்லது பிற ஊரிலுள்ள புகழ்பெற்ற நாட்டார் நிகழ்த்துக் கலைஞரிடம் நேர் காணல் நடத்துகிறார்கள்.

## அலகு இறுதிச் செயல்பாடு

'சமூகப் பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளின் பங்கு' எனும் தலைப்பில் மாணவர்கள் கருத்தரங் கம் நிகழ்த்துகிறார்கள்.

அனைத்து மாணவர்களும் கட்டுரை தயாரிக்க வேண்டும். மாணவர்கள் குழுவாகப் பிரிந்து தங்களது கட்டுரைகளைக் குழுவில் வாசிக்கிறார்கள். இக்கட்டுரைகளின் கருத்துகளை விவரித்து, மேம்படுத்தி, குழுவிற்கு ஒருவர் எனக் கருத்தரங்கில் கட்டுரை வாசிக்கிறார்கள்.

**கருத்தரங்க ஏற்பாடு/ஒருங்கிணைப்பு**

- வரவேற்புரை
- தலைமை உரை
- கட்டுரை வாசிப்பு
- விவாதம்
- அறிக்கை தயாரித்தல்
- அறிக்கை சமர்ப்பித்தல்

## மதிப்பீடு

ஆசிரியர் செயல்பாட்டின் தொடக்கம் முதல் இறுதிவரை மாணவர்கள் அனைவரையும் ஆசிரியர் குறிப்பேட்டின் படி மதிப்பீடு செய்ய வேண்டும். மதிப்பீட்டை Teacher planner ல் குறிக்க வேண்டும். எழுத்துச் செயல்பாட்டை மதிப்பீடு செய்து படைப்புத்தொகுப்பில் (Portfolio) எழுதச் செய்ய வேண்டும். எல்லா மாணவர்களும் கருத்தரங்க நிகழ்வில் பங்கேற்க வேண்டும்.

## புகைப்படக் கண்காட்சி

மாணவர்கள் அனைவரும் குழுவாகப் பிரிந்து குறிப்பிட்ட ஒரு கருத்து அடிப்படையில் திரட்டிய புகைப்படங்களைத் தொகுக்கிறார்கள். அவற்றைக் கண்காட்சியாக அமைக்கிறார்கள். அதன் ஒரு பாகமாகத் தாங்கள் பதிவு செய்த நாட்டார் கலைகளின் பதிவையும் காண்பிக்கிறார்கள்.
புகைப்படக் கண்காட்சியில் மாணவர்கள் அனைவரும் பங்குபெற வேண்டும். மாணவர்கள் கருத்து அடிப்படையில் புகைப்படங்களை அமைத்தல் வேண்டும்.
புகைப்படக் கண்காட்சியை வகுப்பறையில் தயார் செய்தல்

- கண்காட்சி ஏற்பாடு
- கண்காட்சிப் பலகைகளை அமைத்தல்
- படங்கள் அமைக்கும் முறை
- படங்களுக்கான குறிப்புகளை எழுதுதல்
- விளக்கம் கொடுத்தல்
- மாணவர்கள் குழுவாகத் தாங்கள் தொகுத்த புகைப்படங்களைப் பார்வையாளர்களுக்கு விளக்குதல்.

## மதிப்பீடு

ஆசிரியர் செயல்பாட்டின் தொடக்கம் முதல் இறுதி வரை அனைத்து மாணவர்களின் செயல்பாடுகளையும் கவனித்தல் வேண்டும். மதிப்பீடுகளைத் திட்டக் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

- கருத்தரங்கக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.
- புகைப்படக் கண்காட்சி நடத்துகிறார்கள்.

## தொடர் மதிப்பீடு

அலகிலுள்ள எல்லாச் செயல்பாடுகளையும் தொடர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

- விவாதம்
- தொகுப்புகள்
- பேச்சாற்றல்
- கலந்துரையாடல்
- கருத்தரங்கச் செயல்பாடுகள்
- கண்காட்சிக்கான செயல்பாடுகள்

## பருவ மதிப்பீட்டிற்கான செயல்பாடுகள்

- குறிப்புகள்
- கலைகள் / விழாக்கள் பற்றிய நிழற்படங்கள்
- உரைக்குறிப்புகள்
- விழாக்கள் / கலைகள் பற்றிய பதிவுகள்
- புகைப்படத் தொகுப்புகள்
- பட்டியல்கள்
- பத்திரிகைச் செய்திகள்

இவ்வலகு தொடர்பாக மாணவர்கள் எழுதிய குறிப்புகள் அடங்கிய செயல்பாட்டுக் குறிப்பேட்டையும் (Activity log) படைப்புத்தொகுப்பையும் (Portfolio) அலகு நிறைவு பெற்றவுடன் ஆசிரியர் மதிப்பீடு செய்யவேண்டும்.

## அலகுத் தேர்வு

ஓர் அலகில் கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை மாணவர்கள் பெற்றுள்ளார்களா என்பதை அறிய ஆசிரியர் அலகு நிறைவு பெற்றதும் அலகுத் தேர்வு நடத்த வேண்டும். மதிப்பீட்டைத் தொடர் மதிப்பீடு அட்டையில் சேர்க்க வேண்டும்.

**வினாக்கள்** :

1. உங்கள் பள்ளியில் தைத்திங்கள் முதல் நாளன்று பொங்கல் விழா கொண்டாடப்பட உள்ளது. அவ்விழாவில் உரையாற்றுவதற்காக தமிழர் பண்பாடு என்றத் தலைப்பில் உரைக்குறிப்பு தயார் செய்க.
2. • பொங்கல் விழா • ஓணவிழா

   (குறிப்பு : விழாவிற்கான காரணம், கொண்டாடும் முறை, உணவு வகைகள்)

   இரு விழாக்களையும் ஒப்பிட்டு அக்குறிப்புகளின் அடிப்படையில் விமர்சனக் கட்டுரை எழுதுக.
3. தமிழகத்திலும் கேரளத்திலும் காணப்படும் கலைகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.
4. நாட்டுப்புறக் கலைகளை வரிசைப்படுத்துக. அவற்றில் ஏதேனும் ஒன்று குறித்து குறிப்பு எழுதுக.
5. 'கலைகள் பண்பாட்டின் பிரதிபலிப்பே' என்ற கருத்தை மெய்ப்பிக்கும் விதமாக கட்டுரையொன்று தயார் செய்க.
6. கலைகளைப் பாதுகாக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தும் விதமாக நாளிதழ் ஒன்றிற்குத் தலையங்கம் தயார்செய்க.
7. கலைகளின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு உரைக்குறிப்புத் தயார்செய்க.

## குறிப்பு நூல்கள்


1. பண்பாட்டு மானுடவியல் - பக்தவத்சல பாரதி
   மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு,
   சிதம்பரம்.
   நான்காம் பதிப்பு அக்டோபர் 2009
2. நாட்டுப்புறக் கலைகள் - முனைவர். ஆறு. இராமநாதன்
   மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு,
   சிதம்பரம்.
   பதிப்பு 2001
3. தமிழக நாட்டார் நிகழ்த்துக்கலைகள் களஞ்சியம் - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்
   பொன்னி, 31, கிரீன்வேஸ் சாலை
   சென்னை - 6000028.

## இணைய முகவரிகள்

1. www.keetru.com
2. www.noolagam.com
3. www.cict.org

வளப்பகுதி

## நமது நாட்டு விழாக்கள்

மக்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி தோன்றுவதற்கும் சமய உணர்ச்சி பெருகுவதற்கும் பொருளாதாரப் பங்கீடு ஓரளவு நிகழ்வதற்கும் பலப்பல விழாக்கள் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டன. விழைவால் நிகழ்த்தப்படுவதே விழாவாகும். (விழைவு – விருப்பம்)

இவ்விழாக்கள் பொதுவானவையாகவும் இருக்கும். சமயச் சார்பானவையாகவும் இருக்கும். சமயத் தொடர்புடையவனாக இருந்த விழாக்கள் சில, நாளடைவில் சமயச் சார்பற்றனவாக மாறுதலுண்டு. வாழ்வை வளம்படுத்த அறிவுள்ள விழாக்கள் வேண்டுமென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருத்தல் முடியாது. தமிழகத்திலும் வாழ்க்கையை வளம்படுத்தப் பண்டுதொட்டு இன்றுவரை பலப்பல விழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஒரு சில புதியனவாகப் புகுந்துள்ளன. தமிழகத்தில் அன்று தொட்டு இன்றுவரை கொண்டாடப்பட்டுவரும் விழாக்களையும் பிற்கால விழாக்களையும் இங்குக் காண்போம்.

## பண்டைக் கால விழாக்கள்

சங்க கால விழாக்களை முதலில் பார்ப்போம். கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 3–ஆம் நூற்றாண்டு வரைக்குமுள்ள காலத்தைச் சங்ககாலம் என்பர். அந்தக் காலத்தில் மக்கள் தொகை குறைந்திருந்த காரணத்தாலும், பெருவீர மன்னர் மாட்சியுற ஆட்சி புரிந்து நாட்டில் அமைதியை நிலவச் செய்ததாலும், வாணிக வளமும் பயிர் வளமும் செழித்துப் பொருளாதார வளம் அக்காலத்துக்கு ஏற்ற முறையில் சிறந்திருந்ததாலும், மக்கள் விழாக்களைக் கொண்டாடும் மனநிலையைப் பெற்றிருந்தார்கள். மேலும் சங்ககால மக்கள் உலக வாழ்க்கையில் நம்பிக்கை வைத்திருந்தவர்கள். இன்பமாக வாழ விரும்பியவர்கள், வீரத்தில் சிறந்தவர்கள், கடவுளையும் மறவாதவர்கள். எனவே அவர்கள் இன்ப விழாக்களையும் வீர விழாக்களையும் சமய விழாக்களையும் பெருநகரங்களிலும் சிறு பட்டிகளிலும், பலப்பல கொண்டாடி மகிழ்ச்சியுற்றவர்கள். எம் விழைவுடை நாடு என்றும், விழவினம் பலவே என்றும், சாறுதலைக் கொண்ட என்றும் புறநானூற்றுப் பாடல்களில் பல தொடர்களைக் காண்கிறோம். இத்தொடர்கள் அக்காலத்தில் விழாக்கள் நடைபெற்றதைக் குறிப்பிடுகின்றன.

மன்னர் பிறந்தநாள் விழாவை வெள்ளணி விழா என்பர். அரச பக்தி மிக்க பண்டைத்தமிழர், அரசர் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடி இருத்தல் வேண்டும் என்று கருதலாம். மன்னர் தங்கள் பிறந்த நாளை விழாவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். இராசராச சோழன், பெருவுடையார் கோவிலில் தம் பிறந்த நாளை முன்னிட்டு விழா நடத்த ஏற்பாடு செய்திருந்தான். மதுரைத்திருமலை நாயக்கர் தம்முடைய பிறந்தநாளாகிய தைப்பூசத்தன்று பெரிய தெப்பக் குளத்தில் தெப்பவிழா நடத்துமாறு ஏற்பாடு செய்திருந்தார். இன்றும் அவ்விழா தைத்திங்களில் பூசத்தன்று மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. பலருக்குத் திருமலை நாயக்கர் பிறந்தநாளில் தைப்பூச விழா நடக்கிறது என்பது தெரியாது. நாயக்கர் பிறந்த நாள் மறைந்தாலும் விழா நடப்பது மறையவில்லை.

பெருஞ்சோற்று விழா என்று ஒரு விழா நடந்ததுண்டு. மன்னன் வஞ்சிப் பூச்சூடி பிறநாட்டின் மீது படையெடுப்பதற்கு முன் தன் வீரர்களிடம் செஞ்சோற்றுக் கடனை நினைவூட்டும் முறையில் நடத்தியது இது. இதனை வீர விழா எனலாம். வெற்றி நாளையும் விழாவாக கொண்டாடியது உண்டு. இவையனைத்தும் சிறப்பு விழாக்களாக நிகழ்ந்தவை.

பொதுவாகப் புதுப்புனல் விழாவும் நாட்டில் கொண்டாடப்பட்டன. காவிரி, வைகை முதலிய ஆறுகளில் புதுவெள்ளம் வந்த காலத்தில் புதுப்புனல் விழா நடைபெறுவது வழக்கம், பரிபாடலில் இவ்விழாவை பற்றிக் காணலாம். இன்றும் சோழ நாட்டில் புதுப்புனல்விழா பதினெட்டாம்படி கறுப்பன் விழாவாக மாறி ஒரு சிலரால் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளில் புதுப்புனல் விழா மன்னர்களாலும் மக்களாலும் பெருநிலையில் கொண்டாடப் பெற்றது. கரிகாற்சோழன் இவ்விழாவைக் காணச் சென்றதாகவும், அவனுடைய மருமகன் ஆட்டனத்தி என்பவன் நீராடி மகிழ்ந்திருந்தபோது, வெள்ளத்தால், அடித்துச் செல்லப்பட்டதாகவும், மன்னர் மன்னன் மகளான ஆதிமந்தி வெள்ளத்தோடே சென்று தன் கணவனைத் தேடிப்பெற்றதாகவும் கதை கூறுகிறது.

இளவேனிற் காலத்தில் மகளிரும் மைந்தரும் காமவேளை நினைத்து இளமரச் சோலைகளிலும் நீர்த்துறைகளிலும் தங்கி விளையாடி மகிழ்ந்தார்கள். இவ்விழா பாண்டிய நாட்டில் காமன் பண்டிகை என்னும் பெயரால் மிக அருகிக் கொண்டாடப் பெறுகிறது. ஆண்டாள் தமது நாச்சியார் திருமொழியில் தைத்திங்கள் இறுதியில் காமன் விழாவைக் கொண்டாடியதாகப் பாடியுள்ளார். அம்மையார்.

"தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண்டல மிட்டு மாசி முன்னாள்
ஐயநுண் மணல் கொண்டு தெரு அணிந்(து)
அழகினுக்(கு) அலங்கரித்(து) அனங்க தேவா
உய்யவும் ஆம் கொலோ என்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வேங்கடவற் (கு) என்னை விதிக் கிற்றியே
என்றும்,
காய் உடை நெல்லோடு கரும்(பு) அமைத்து
கட்டி அரிசி அவல் அமைத்து
வாய் உடை மறையவர் மந்திரத்தால்
மன்மதனே உன்னை வணங்குகின்றேன்"

என்றும் ஆண்டாள் பாடுவதால் காமனை வழிபட்ட நாளும் முறையும் அறிகிறோம்.

திருவாதிரை விழா, தைநீராடல் விழா, கார்த்திகை விளக்கீடு விழா இவை கொண்டாடப் பெற்றனவாகச் சங்க நூல்களில் காண்கிறோம். திருவாதிரையில் நடந்தது திருவாதிரை விழா. இது மார்கழியில் மதி நிறைந்த நன்னாளில் தொடங்கி நடைபெறுவது என்று பரிபாடலால் அறிகிறோம். தைந்நீராடல் என்றொரு விழாவும் பரிபாடலில் குறிப்பிடப்படுகிறது. இதனை அம்பா ஆடல் என்றும், பரிபாடலே கூறுகிறது. இவ்விழாவை நடத்துவதற்கு உரியவர்கள் இளம்பெண்களே. தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ என்று கலித்தொகையும்,

"நறுவிர் ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப் பலர்படிந்து"

என்று ஐங்குறுநூறும் இத்தகைய நீராடலைக் குறிப்பிடுகின்றன. ஒரு சிலர் மார்கழி நீராடலையே தைந்நீராடலாகப் பரிபாடல் குறிப்பிடுவதாகக் கருதுகின்றனர்.

சிலப்பதிகாரக் காலத்திலும் மணிமேகலைக் காப்பியக் காலத்திலும், காவிரி பூம்பட்டினத்தில் மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடிய பெருவிழா இந்திர விழாவாகும். இது இந்திரனுக்காக நடைபெற்றது. எல்லாச் சமயத்தினரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இது காவிரிபூம்பட்டினத்தில் மட்டும் நடந்தது. இந்திர விழா உண்டென்பதை வான்மீகியும், காளிதாசரும் தத்தம் நூலில் குறிப்பிட்டிருப்பதாக டாக்டர்.உவே.சாமிநாத ஐயர் அவர்கள் தமது சிலப்பதிகாரப் பதிப்பின் அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். தோரண வீதிகளிலும் தோமறு கோட்டிகளிலும் பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் பாவை விளக்கும் பலவுடன் பரப்பியும், காய்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும் பூக்கொடி வல்லியும் கரும்பும் நட்டும், பத்தி வேதிகைப் பசும் பொன் தூணில் முத்துத் தாமங்களை முறையொடு தொங்கவிட்டும், தெருக்களில் புதுமணல் பரப்பியும், வீட்டு வாயில்களில் வழிபாடு செய்தும் மக்கள் மிக்க மகிழச்சியுடன் இந்திர விழாவைக் கொண்டாடினார்கள். இவ்விழாக் காலத்தில் சமய அறிஞர்கள் சமய வாதங்கள் செய்ததுமுண்டு.

இவ்விந்திர விழாவில்,

"பற்றாமாக்கள் தம்முடனாயினும்
செற்றமும் கலாமும் செய்யா (து) அகலுமின்"

என்று மக்களுக்கு முரசறைவித்ததாக மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. பகைவரிடத்தும் மக்கள் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பது இவ்வடிகளின் கருத்து. கிறிஸ்து பிறந்த நாளன்று தேவ தூதர்கள் வானத்தில் தோன்றி விண்ணகத்து இறைவனுக்கு வாழ்த்தும் மண்ணகத்து அமையும் மக்கள்பால் அன்பும் நிலவுவதாக என்று இனிய பாடல் பாடியதாக விவிலிய நூல் அறிவிக்கிறது. இதனோடு முரசறைவித்த வேண்டுகோளும் ஒத்திருத்தல் காண்க.

இந்திரவிழா, இருபத்தெட்டு நாட்கள் நடைபெற்றது. இந்திரவிழாவின் இறுதி நாளில் மக்கள் கடற்கரைக்குச் சென்று நீராடி மகிழ்வது வழக்கம். இவ்விழா சித்திரைத் திங்களில் நடைபெற்றது.

சங்க காலத்தில் கார்த்திகை விழாக் கொண்டாடுவது பெரு வழக்கு. அந்நாளில் பெண்கள் விளக்குகள் ஏற்றி வைத்தார்கள். கார் நாற்பது என்னும் நூல் 'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட, தலைவாள் விளக்கின் தகையுடையவாகி' என்றும் களவழி நாற்பது என்னும் நூல் "கார்த்திகை சாற்றின் (விழாவின்) கழி விளக்கைப் போன்றவை" என்றும் கூறுவதால் இவ்விழாவைக் குறித்து அறிகிறோம்.

## இடைக்கால விழாக்கள்

கிபி 3-ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 15-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை இடைக்காலம் எனலாம். கி.பி 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் பூம்பாவை இறந்தமை குறித்துப் பாடி வருந்திய பாக்களில் பூம்பாவையே! விழாக்களையெல்லாம் காணாமற் போயினையே என்று குறிப்பிட்டதில் ஓணவிழா, கார்த்திகை நாள் தையலார் கொண்டாடும் விளக்கீடு விழா, மாசிக் கடலாட்டு விழா ஆகிய இவ்விழாக்களைச் சிறப்பாகக் கூறியுள்ளார். கி.பி 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இறையனார் களவியலுக்கு உரை எழுதிய பிற்கால நக்கீரர், மதுரை ஆவணி அவிட்டம் விழா, உறையூர்ப் பங்குனி உத்திரம் விழா, கருவூர் உள்ளிவிழா ஆகிய இவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார். இவையனைத்தும் சமயச் சார்பான விழாக்களாகும்.

## பிற்கால விழாக்கள்

பிற்கால விழாக்களில் நவராத்திரி விழா, தீபாவளி விழா, பொங்கல் விழா இவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

முற்காலத்தில் இவை கொண்டாடப்பட்டதாக நூல்களில் காணோம். நவராத்திரி விழாவை இப்பொழுது கலைமகள் விழா என்பர். இது கலைமகள் விழா மட்டுமன்று, மலைமகள், மலர்மகள், கலைமகள் ஆகிய மூவர்க்கும் மும்மூன்று நாட்களாக அரசர்களால் கொண்டாடப்பட்ட வீர விழாவாகப் புகழேந்தி, ஒட்டக்கூத்தர் கதையிலிருந்தும் திருமலை நாயக்கர் வரலாற்றிலிருந்தும் அறிகிறோம். புகழேந்தி, ஒட்டக்கூத்தர் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். திருமலைநாயக்கர் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டு, புகழேந்திப் புலவர் கதையில் ஒட்டக்கூத்தர், நவராத்திரி விழாவின் இறுதிநாளில் தம்மிடம் தோற்ற புலவர்களின் தலைகளை இரண்டு இரண்டாய் முடிபோட்டு வெட்டியதாகக் கதை கூறுகிறது. திருமலை நாயக்கர் இவ்விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடினார். அதனால் இந்நவராத்திரி விழா கி,பி.17-ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழகத்தில் அரசர்களால் மிகவும் கொண்டாடப்பட்டு வந்தது என்பது தெரிகிறது. இந்நாளில் பலரும் இதைச் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றனர். இந்தக் கலைமகள் விழாவை ஆயுதபூசை என்றும் கூறுகின்றனர். இது துர்க்கை பூசையாகவும் வங்க நாட்டில் இவ்விழாவைச் சரஸ்வதி பூசையாகவும் ஆயுத பூசையாகவும் கொண்டு நூல்களையும் ஆயுதங்களையும் வைத்து இந்துக்கள் வழிபடுகிறார்கள். ஒரு முறையில் நோக்கினால் இஃது இறைவனுக்கு நன்றி செலுத்தும் நாளாகும். சரஸ்வதி பூசையால் தமிழ் நூல்கள் செல்லரிக்கப்படாமல் ஓரளவு பாதுகாக்கப்பட்டன. புலவர் வீடுகளில் மக்கள் கலைமகள் நாளன்று பழைய ஏடுகளை எடுத்த துப்புரவுப்படுத்திப் பூசைக்கு வைத்தார்கள். அதனால், பல நூல்கள் உயிர் பிழைத்தன. ஆயுத பூசையாகக் கருதியவர்கள் வீர விழாவாகக் கொண்டாடினார்கள். இதனால் வீரம் மக்களிடம் பாதுகாக்கப்பட்டது. தமிழ் நூல்களையும் தமிழ் மக்கள் வீரத்தையும் பாதுகாத்த இவ்விழாவிற்கு நன்றி செலுத்த வேண்டியது நமது கடமையன்றோ?

இன்று இந்திய நாடெங்கும் கொண்டாடப்படும் தீபாவளி விழா (ஒளி விழா) நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் புதிதாகப் புகுந்தது. தீபாவளி என்பதற்கு விளக்கு வரிசை என்பது பொருளாகும். இது குஜராத்திகளுக்குப் புத்தாண்டு விழாவாகும்.

பொங்கல் விழாவும் புதிதாகப் புகுந்த விழாவேயாகும். சங்க நூல்களிலும் இடைக்கால நூல்களிலும் பொங்கல் விழா குறிப்பிடப்படவில்லை. பிற்காலத்தில் இதனை மகர சங்கராந்தி என்றனர். சென்னைப் பகுதிகளில் இது போகிப் பண்டிகையிலிருந்து கன்றுப் பொங்கல் வரை நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது. மார்கழியின் இறுதி நாளில் மழைக்குத் தலைவனாகவும், மருத நிலத்துக்குரிய கடவுளாகவும் கருதப்படுகின்ற இந்திரனுக்குத் தனி வழிபாடு செய்யத் தை மாதத்துக்கு முன் இது வைக்கப்பட்டது போலும். போகி என்னும் சொல் இந்திரன் எனப்பொருள்படும். ஆதலால் இது போகிப்பண்டிகை எனப்பட்டது. தைத்திங்கள் முதல் நாளன்று சூரியனுக்குப் பொங்கலிட்டு வழிபடுவதுண்டு.

இரண்டாவது நாள் மாடுகள் நன்கு வாழவும், மூன்றாவது நாள் கன்றுகள் நன்கு வளரவும் கடவுளுக்கு வழிபாடு செய்வது வழக்கம். கன்றுப் பொங்கலைக் காணும் பொங்கல் என்பது பொருத்தமன்று. இன்று இப்பொங்கல் விழா சமய சார்பற்றதாகித் தமிழர் திருநாளாக, உழவர் நன்னாளாகத் தமிழகத்தின் பெருநாளாகக் கொண்டாடப்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

ஹாபி டூபாய்ஸ் என்ற ரோமன் கத்தோலிக்கப் பாதிரியார் இப்பொங்கல் விழாவை இந்துக்களின் பழக்க வழக்கங்கள் என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் இதை மகரசங்கராந்தி என்றே குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். இப்பாதிரியார் தென் இந்தியாவில் தமிழ் நாட்டிலும், ஆந்திர நாட்டிலும் 1792-லிருந்து 1823 வரையில் 31 ஆண்டுகள் சமய ஊழியம் செய்தவர். இவர் தமது நூலில் நவராத்திரி, தீபாவளி, பொங்கல் முதலிய 18 விழாக்களைக் குறிப்பிட்டிருக்கிறார். பொங்கல் என்னும் மகர சங்கராந்தி ஆந்திர நாட்டிலும் கொண்டாடப்படுகிறதாம். இவர் மார்கழி மாதத்தில் இந்துக்கள் தங்கள் வீடுகளுக்குமுன் விடியற்காலத்தில் சாணத்தால் மெழுகிக் கோலமிட்டு, சாணத்தால் நான்கு மூலைகளில் பிள்ளையார் பிடித்து நிறுத்திப் பூசுணைப்பூ வைப்பதன் உட்கருத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார். மார்கழி மாதம் பீடை மாதமாகக் கருதப்படுவதால் அப்பீடை வீட்டிற்குள் புகாதவாறு துன்பங்களைத் தடுக்கும் விக்கின நாயகரை இல்லத்திற்கு முன் அம்மாதத்தில் நாள்தோறும் அமைத்து வைப்பது வழக்கம் என்றும் அப்படி அறிகுறியாக வைக்கப்படும் சாணி உருண்டைகளை நாள்தோறும் எடுத்துக் கூடையில் வைத்திருந்து கன்றுப் பொங்கலுக்கு மறுநாள், அவற்றைப் பெண்கள் கொட்டு முழக்குகளுடனும் கும்மி அடித்தலுடனும் எடுத்துச் சென்று ஊருக்கு வெளியிலிருக்கும் குளத்தில் விட்டுத் திரும்பவது வழக்கம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## முடிவுரை

வாழ்வை விஞ்ஞான முறையில் நடத்தினால் மக்களுக்கு இன்பம் இராது. மக்கள் வாழ்வுக்கு, இன்ப வாழ்வுக்கு விழாக்கள் கட்டாயம் வேண்டும். ஆனால் அவை அறிவைப் பாழ்படுத்தாமல் பொருளை அழிக்க வழி செய்யாமல் இருத்தல் வேண்டும். நாட்டில் பொருளாதாரப் பங்கீடு செய்து ஏழை மக்களை உயர்த்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். நல்ல வகையில் உள்ளத்துக்கு இன்பம் தரக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். நாட்டில் புதிதாகப் புகுந்துள்ள விழா விடுதலை விழா. இவ்விழா நாட்டுப்பற்றை ஊட்டத்தக்கது. நல்ல விழாக்கள் நடைபெற்றால்தான் நம் மக்கள் நாட்டில் நலமுற மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று சொல்லத் தேவையில்லை.

## கலித்தொகை

திணை : நெய்தல், பாடல் : 133

இல்லறம் நடத்துவதில் சிறந்த செயல் வறியவர்களுக்கு உதவுதல். அகவாழ்வில் போற்றிப் பாராட்டுதற்குரியது துணையைப் பிரியாதிருத்தல். மக்கள் பண்பு எனப்படுவது உலக ஒழுக்கம் அறிந்து நடந்து கொள்ளுதல்.

அன்பு என்று கூறப்படுவது தன்னுடைய சுற்றத்தாரைத் தழுவிக் கொள்ளுதல், அறிவு என்று கூறப்படுவது அறிவற்றோரின் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதல், செறிவு என்று கூறப்படுவது மறைபொருளை பிறர் அறியாமல் பாதுகாத்தல். முறை என்று சொல்லப்படுவது கொலைக் குற்றம் செய்தார்க்கு இரக்கமின்றி மரண தண்டனை வழங்குதல். பொறுமை என்று கூறப்படுவது தம்மைப் பழிப்பவரையும் பொறுத்துக் கொள்ளுதல்.

தலைவரே! இல்லறநெறிகளை நீர் அறிந்து நடப்பீராயின் அதற்கேற்ப நான் ஒன்றைக் கூறுவேன். என் தோழியின் நெற்றி அழகு நீங்க நீர் பிரிதல், ஒருவர் பால் உண்ணும் போது அக்கலத்தைப் பறித்தல் போல் கொடியதாகும். அதனால் உமது காரணமாக வருந்திய அவளது துயரத்தை நீர் இப்போதே நேரில் சென்று அவளைத் திருமணம் செய்து கொண்டு அவள் துன்பத்தைப் போக்குவீராக.

## புறநானூறு

## துறை : பொருண்மொழிக் காஞ்சி, பாடல் : 172

இவ்வுலகம் இருப்பது பண்பாடு உடையவர் இருப்பதாலே, மேலுலகத்திலுள்ள இந்திரனுக்குரிய அமிழ்தமே கிடைத்தாலும் அதைத் தனியே உண்பதில்லை. வாழ்க்கையில் வெறுப்பில்லாதவர், மனச்சோர்வு இல்லாதவர், தீய செயல்களுக்கு அஞ்சுபவர், புகழ் என்றால் உயிரையும் கொடுப்பவர், பழி என்றால் உலகத்தையே பெற்றாலும் கொள்ள மாட்டார். மனக்கவலை இல்லாதவர். அத்தகைய பண்புகளை உடையவராய்த் தமக்கு என எதற்கும் முயற்சி செய்யாது பிறருக்காகவே முயற்சி செய்பவர்கள் இருப்பதால் இவ்வுலகம் சிறப்பாக இருக்கிறது. (உயிருக்கு நலம் செய்யும் இம்மை, மறுமைக் கடன்களை எடுத்துக்கூறுதல்)

**துறை : பொருண்மொழிக் காஞ்சி, பாடல் : 192**

எல்லா ஊரும் எங்கள் ஊரே! எல்லா மனிதரும் எங்கள் சுற்றத்தினரே. தீமையும் நன்மையும் பிறர்தர வருவதில்லை. நாமே அதற்குக் காரணம். அதனால் வருந்துதலும் வருந்தாதிருத்தலும் பிறர் தருவதில்லை. சாதல் என்பது புதியது அன்று. வாழ்தல் இனிது என்ற மகிழ்தல் இல்லை. வாழ்வு வெறுக்கும் போது கொடுமையானது என்று நினைத்தல் இல்லை. வானத்தில் மின்னலோடு மழை பெய்து அதனால் கற்களை அடித்துக் கொண்டு வரும் பெரிய ஆற்றல் விரைந்து செல்லும் நீரின் போக்கில் படகு செல்வதுபோல் அரிய உயிர் அதன் முறையில் செல்கின்றது. இதனைத் தெரிந்த அறிவுடையோர் பெரியோரை வியந்து பாராட்டுதல் இல்லை. அதே போன்று சிறியவர்களை இகழ்தலும் இல்லை.

# சுவைகளின் கலவை

அலகு 2

காலஅளவு : 32 மணி நேரம்

## அலகு அறிமுகம்

'சுவைகளின் கலவை' என்னும் இவ்வலகு உடலுக்கு இன்பம் தரும் அறுசுவைகள் போல், உள்ளத்திற்கு இன்பம் தரும் எண்சுவைகளின் கலவை. மருத்துவம், சமையல் முதலானவை உட்பட கலைகளை மொத்தம் அறுபத்து நான்காகப் பகுத்துள்ளனர். எனினும், அனைத்துச் சுவைகளையும் அள்ளித்தரும் ஒரே கலை இலக்கியக் கலையே ஆகும்.

தமிழ் இலக்கியம் பரந்து விரிந்தது. சங்க காலம் முதல் தற்காலம் வரை பல்வகைப் பாடுபொருள்களையும் பல்வகைச் சுவைகளையும் உள்ளடக்கிய கணக்கிலாக் கவிதை நூல்களும் காவிய நூல்களும் நாடக நூல்களும் கட்டுரை நூல்களும் இலக்கண நூல்களும் தோன்றியுள்ளன; தோன்றிய வண்ணம் உள்ளன.

சிறந்த சில சுவைகளை வெளிப்படுத்துமாறு சில நூல்களிலிருந்து சில எடுத்துக்காட்டுகள் நல்கி இவ்வலகு தயாரிக்கப்பட்டுள்ளது. பல் சுவைகளையும் எடுத்தியம்பினும் நகைச் சுவைக்காக இரண்டு பாடங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒன்று கவிதை வடிவம், மற்றொன்று நாடக வடிவம்.

இக்காலம் மன அழுத்தம் நிறைந்த காலம், நின்று நிதானமாகச் சிந்தித்துச் செயல்பட நேரம் இல்லை. அவசரமான உலகம் இது. இன்றைய சூழ்நிலையில் சிரிக்கவும், சிந்திக்கவும் மகிழவும் ஏற்ற பாடங்கள் தேவை என உணர்ந்தே நகைச்சுவைக்காக இரு பாடங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பல்வகை இலக்கியங்களையும் படித்து மகிழ்வதற்கும் நகைச்சுவையை நகைச் சுவையாய் எடுத்துக் கொள்ளாமல், நகைச் சுவையில் சமூகச் சீர்கேடுகளை ஒழிக்க மாணவர்கள் முன்வருவதற்கும் இலக்கியங்கள் படைத்துப் புகழ் பெறுவதற்கும் இவ்வலகு உதவுவதாக!

## கற்றல் அடைவுகள்

- ❑ கலைகளில் சிறந்தது இலக்கியம் என்பதற்கான காரணங்களைத் தொகுத்தெழுதுகிறார்கள்.
- ❑ பண்டைய இலக்கியங்களுக்கும் இன்றைய இலக்கியங்களுக்குமான வேறுபாடுகளைப் பட்டியலிடுகிறார்கள்.
- ❑ மெய்ப்பாடுகள் பற்றிக் கட்டுரை எழுதி, இதழுக்கு அனுப்புகிறார்கள்.
- ❑ இலக்கியத்தின் பாடுபொருள்கள் குறித்துக் கருத்தரங்கம் நடத்துகிறார்கள்.
- ❑ பல்வேறு சுவைகள் அடிப்படையில் நாடகங்கள் / கவிதைகள் / கதைகள் எழுதுகிறார்கள்.
- ❑ ஓர் இலக்கிய வடிவத்தை இன்னோர் இலக்கிய வடிவமாய் மாற்றியமைக்கிறார்கள்.
- ❑ இலக்கியப் படைப்பாளிகளைப் போற்றித் தாமும் இலக்கியம் படைக்கிறார்கள்.
- ❑ படைப்பாளிகளைப் பேட்டி காண்கிறார்கள்.
- ❑ சிலேடை அணி, எச்ச வினை, புணர்ச்சி ஆகிய இலக்கணங்களை மொழியில் கையாளுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்குகளும்

- இலக்கியப் படைப்புகளைச் சுவைக்கும் மனப்பாங்கைப் பெறுகிறார்கள்.
- பழந்தமிழரின் கூர்த்த பார்வையைப் போற்றித் தாமும் அவரைப்போல் திகழ ஆர்வம் கொள்கிறார்கள்.
- பிறரைத் திருத்த, நாகரிகமான சொற்களை அங்கதச் சுவையுடன் கையாள விரும்புகிறார்கள்.
- சிறந்த மெய்ப்பாடுகளால் பிறரை மகிழ்விக்க ஆவல் கொள்கிறார்கள்.
- பல்வகை இலக்கியங்களைப் பயின்று சிறந்த மேற்கோள்களைக் குறிப்பெடுக்கும் பழக்கத்தை மேற்கொள்கின்றனர்.
- நட்பு, பக்தி போன்ற மதிப்புகளைப் போற்றிக் காக்க முன்வருகிறார்கள்.

## கற்றல் கருவிகள்

- ❄ நகைச்சுவை, வீரம், அவலம் போன்ற மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் காணொலிக் காட்சிகள்.
- ❄ இணையம்
- ❄ தொல்காப்பியம், மருமக்கள் வழி மான்மியம், இலக்கிய வரலாறு போன்ற மூல நூல்கள்.
- ❄ கவிமணி, மு.வரதராசன், பாரதியார், பம்மல் சம்பந்த முதலியார் போன்றோரின் நிழற்படங்கள்.

# அலகுச்சட்டகம்

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை | **நுழைவுச் செயல்பாடு**<br>பல்வேறு கலைகளின் நிழற்படம் காட்டி, மாணவர்களிடம் சில கலைகளை வெளிப்படுத்தச் சொல்லி, கலை என்பதன் விளக்கத்தை வருவித்தல்.<br>மொழி என்பது நாகரிகக் கருவி ஆனதால், மொழியாலான இலக்கியமே கலைகளில் சிறந்தது என்னும் கருத்தைக் கலந்துரையாடல் வழிப் பெறுதல். பாடப்பகுதியை வாசித்து கருத்துகளைப் பட்டியிடுதல் மதிப்பீடு செய்தல். | கலையின் பொதுத் தன்மை பற்றியும் கலைகளில் சிறந்தது இலக்கியம் என்பதன் காரணம் பற்றியும் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.<br>அன்றைய - இன்றைய இலக்கியங்களின் முக்கிய வேறுபாடு களைப் பட்டியலிடுகிறார்கள். |
| • பண்டை இலக்கியங்கள் பக்தி, காதல், வீரம் முதலியவற்றைப் பேசுவன, தற்கால இலக்கியங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவன. | **குழுக் கலந்துரையாடல்**<br>குழுக் கலந்துரையாடல் நடத்தி, மாணவர் பங்களிப்பை ஆசிரியர் மதிப்பிடுதல். | |
| • கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் என்பன இலக்கியக் கூறுகள். கருத்து உயிர் போன்றது. | விடை வருவித்தல் முறையைப் பின்பற்றி, வினா-விடை வழி, மாணவரிடமிருந்து விடைகளை வருவித்தல்.<br>தன் மதிப்பீடு, ஆசிரியர் மதிப்பீடு வழி மாணவர் திறனை மதிப்பிடுதல். | இலக்கியக் கூறுகள் பற்றிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| • தொல்காப்பியம் மெய்ப்பாடுகளாக மொத்தம் எட்டைக் குறிப்பிடுகின்றது. | உணவின் சுவை, உணர்வின் சுவை இவை பற்றிக் கலந்துரையாடி, வடநூலார் 'சமநிலை' என்னும் ஒன்றையும் சேர்த்து மெய்ப்பாடுகள் (ரசம்) மொத்தம் ஒன்பது என்று கூறுவதையும் கவனத்தில் கொள்ளுதல்.<br>தமிழில் 'சமநிலை' என்னும் ஒன்று இல்லாமைக்குக் காரணம் காணுதல். தொல்காப்பிய மெய்ப்பாட்டை மதிப்பிடுதல். | மெய்ப்பாடுகள் எட்டு என்னும் தலைப்பில், கட்டுரை தயாரித்து இதழ்களுக்கு அனுப்புகிறார்கள். |
| • இலக்கியத்தின் பாடுபொருள்கள் இன்பம், காதல், வீரம், அவலம், நகைச்சுவை முதலியவை | **கருத்தரங்கம் நடத்துதல்**<br>குழுவாகக் கலந்துரையாடி, ஆசிரியர் உதவியால் இலக்கியத்தின் பாடுபொருள்களைக் குறித்துக் கருத்தரங்கம் நடத்துதல்.<br>தன் மதிப்பீடு, ஆசிரியர் மதிப்பீடு ஆகிய மதிப்பீடுகளைக் கையாளுதல். | இலக்கியத்தில் பாடுபொருள் பற்றி விவாதம் செய்கிறார்கள்.<br>நாளிதழ்களுக்குக் கட்டுரை தயாரிக்கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடு/செயல்முறை/மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • சிலேடை என்பது இருபொருள் தருவது. உடம்படுமெய் என்பது இரண்டு உயிரெழுத்துகள் புணரும் போது தோன்றும் மெய்யெழுத்து. | விதி வரும் முறை வழி பல எடுத்துக்காட்டுகளை வரவழைத்துச் சிலேடை என்பது இரு பொருள் தரும் படியாகப் பாடுவது என்பதையும் இரண்டு உயிர்கள் புணரும் போது தோன்றும் எழுத்து உடம்படுமெய் என்பதையும் கலந்துரையாடுதல்.<br>எடுத்துக்காட்டுகள் தருதலின் அடிப்படையில் மதிப்பிடுதல். | உடம்படுமெய், சிலேடை பற்றிய விளக்கங்களை அறிந்து மொழியில் பயன்படுத்துகிறார்கள். |
| • மருமக்கள் வழி மான்மியம், அங்கதச் சுவை வழியாகச் சமூகத்தின் அவல நிலையைச் சுட்டிக் காட்டிச் சீர்திருத்தம் செய்கிறது. | **வடிவமாற்றம் செய்தல்**<br>இன்று நாட்டில் நடக்கும் ஊழல், கையூட்டு போன்ற சீர்கேடுகளை அலசிப்பார்த்து, அவற்றைப் போக்கக் கையாளப்படும் ஓர் உத்தி நகைச்சுவை கலந்த கவிதைகள் என்பதைக் கலந்துரையாடல்.<br>கவிதையை உரைநடையாய் வடிவ மாற்றம் செய்தல். அவற்றை மதிப்பிடல். | கவிதையை உரைநடையாக வடிவமாற்றம் செய்கிறார்கள். |
| • நகைச்சுவை நாடக வடிவத்தால், தனி மனிதர் களைத் திருத்த முடியும். | **நாடகம் எழுதி நடிக்கிறார்கள்**<br>நகைச்சுவையாக நாடகம் எழுதி களம், கருவி, ஆடை முதலியவற்றைத் தயார்செய்து நடித்தல்.<br>அளவுகோல்களின் அடிப்படையில் நாடகம் எழுதுதல், நடித்தல் ஆகிய திறன்களை மதிப்பிடுதல்.<br>படைப்பாளர்களைப் பேட்டி காணுதல்.<br>பேட்டிகாண்பதற்கான வினாநிரல் தயாரித்தலை மதிப்பிடுதல்.<br>**கருத்தரங்கம் நடத்துதல்**<br>சுவைகளின் கலவை எனும் தலைப்பில் மாணவர்கள் கருத்தரங்கம் நடத்துகிறார்கள். | நாடகம் எழுதி நடிக்கிறார்கள்.<br>படைப்பாளிகளைப் பேட்டி காணுகிறார்கள் |

## அலகுப் பகுப்பாய்வு

### நுழைவுச்செயல்பாடு

"கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக"

என்பார் வடலூர் வள்ளலார். கலை, கலைக்காகவே என்றல்லாமல், கலை வாழ்க்கைக்காகவே என்று கொள்வதே சிறப்பு.

கலைகளில் உயர்ந்தது இலக்கியக் கலையே. இலக்கினை இயம்புவதே (சொல்வதே) இலக்கியமாகும். இலக்கியம் என்பது மனிதனை முன்னேற்றம் என்னும் இலக்குக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவ்வகையில், மாணவர்களை நற்சிந்தை, நற்செயல், நல்வாழ்வு முதலிய இலக்குகளுக்குக் கொண்டு செல்ல இப்பாடம் வைக்கப்படுள்ளது. சுவையைச் சுவைக்க மட்டும் செய்யாமல், சுவை மூலம் சுகம் காண வேண்டும். மனச் சுமை போக்க வேண்டும். இலக்கியம் படிப்பதோடு இலக்கியம் படைத்துப் புகழ் வாழ்வு வாழவும் இப்பாடம் உதவும்.

### செய்முறை வழியாக

நடனம், ஓவியம், இசை, பேச்சு, நடிப்பு போன்ற கலைகளின் நிழற்படங்களை நழுவுபடம் மூலமாகக் காட்டுதல். யார் யார் எந்தக் கலையில் ஆர்வம் உள்ளவரோ அந்தக் கலையைச் செய்துகாட்டச் செய்தல்.

- ஓவியம் வரைதல்
- பாட்டுப் பாடுதல்
- நடித்தல்
- கவிதை சொல்லுதல்
- சிற்றுரை நல்குதல்

### கலந்துரையாடல் வழியாக

கலை என்பதற்கு என்ன விளக்கம் அளிக்கலாம் என்னும் வினாவை எழுப்பிக் கீழ்க் காண்பவை போன்ற விடைகளை வருவித்தல்.

- பார்க்க அழகு
- கேட்க இனிமை
- துய்க்க இதம்
- நினைக்க இன்பம்
- அளவுகளில் பொருத்தம்

மாணவர்கள் கூறும் விளக்கங்களிலிருந்து கலைகளில் சிறந்த கலை எது என்னும் வினாவுக்கு விடைகாண முயலுதல். விடைக்கான காரண காரியங்களையும் அலசுதல். நினைக்க நினைக்க இன்பம் தருவதுடன் வாழ்வைச் செம்மைப்படுத்த உதவுவதே உயர்ந்த கலையாக இருக்க முடியும் என்னும் முடிவுக்கு வந்து, அது இலக்கியக் கலையே எனப் பாடப்பகுதியில் அடியெடுத்து வைத்தல்.

பாடப்பகுதி (இலக்கியச்சுவைகள் பக்கம் 31) -இன் முதல் பத்தியைக் குழுக்களாகப் பிரிந்து வாசித்து மையக் கருத்தைப் பட்டியலிடுகிறார்கள்.

- மொழி என்பது நாகரிகக் கருவி
- மொழி என்பது வளர்ச்சிக்குத் துணைநிற்பது
- சொற்களை ஊடுபொருளாய்க் கொண்டது இலக்கியம்
- எனவே இலக்கியம் சிறந்த கலையாகக் கருதப்படுகிறது.

**மதிப்பீடு செய்தல்**

பட்டியலிட்டவற்றை மாணவர்கள் குழுவுக்கு ஒருவர் என வகுப்பில் வாசிக்கிறார்கள். இதைக் குழுவாக மதிப்பீடு செய்யவேண்டும்.

குழுமதிப்பீட்டைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாணவனின் செயல்பாட்டையும் ஆசிரியர் மதிப்பிடுதல். பின்வரும் மதிப்பீட்டு அளவுகோல்களைக் கையாளலாம்.

- சிந்திக்கும் ஆற்றல்
- கோவையாக எடுத்துரைக்கும் ஆற்றல்
- பிறர் கருத்துக் கோவைக்கு மதிப்பளிக்கும் பண்பு

**கற்றல் அடைவுகள்**

கலைகளில் சிறந்தது இலக்கியம் என்னும் கருத்தாக்கத்தை மனத்தில் பதிக்கிறார்கள். குறிப்புகள் தயாரிக்கிறார்கள். 'சிறந்த கலை' என்னும் தலைப்பில், கீழ்வரும் குறள் பாக்களையும் மேற்கோள் காட்டிப் பேசுகிறார்கள்.

- 'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
  பண்புடை யாளர் தொடர்பு'
- 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
  கற்றனைத் தூறும் அறிவு'.

மாணவரின் கற்றல் அடைவுகளைப் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் தமது குறிப்பேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

**குழுக் கலந்துரையாடல்**

இலக்கிய வகைகளைக் காலத்தின் அடிப்படையில் ஒரு குழுவும், கருப்பொருளின் அடிப்படையில் இன்னொரு குழுவும், சொல் முறையில் (வடிவ அமைப்பில்) இன்னொரு குழுவும் கலந்துரையாடுகின்றன. கீழ்வரும் பகுப்புகளைச் செய்கின்றனர்.

**அ. காலத்தின் அடிப்படையில்**

- சங்க கால இலக்கியம் – பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு
- இடைக்கால இலக்கியம் – கம்பராமாயணம், வில்லிபாரதம், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா போல்வன
- தற்கால இலக்கியம் – பாரதி, பாரதிதாசன், கவிமணி, கண்ணதாசன் போன்றோர் பாடல்கள்.

**ஆ. கருப்பொருளின் அடிப்படையில்**

- அறம் – திருக்குறள்
- காதல் – அகநானூறு
- பக்தி – திருப்பாவை
- வீரம் – கலிங்கத்துப்பரணி

**இ. சொல்முறை (வடிவம்) அடிப்படையில்**

- நாடகம் – மனோன்மணீயம்
- கதை – சிறுகதைத் தொகுப்புகள்
- கவிதை – மலரும் மாலையும்
- கட்டுரை – கட்டுரைத் தொகுப்புகள்

மாணவர்கள் 'இலக்கியச் சுவைகள்' பாடப்பகுதியின் இரண்டாம் மூன்றாம் பத்திகளைக் குழுக்களாகப் பிரிந்து வாசிக்கிறார்கள். கலந்துரையாடுகிறார்கள். அன்றைய இலக்கியத்துக்கும் இன்றைய இலக்கியத்துக்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகளைப் பட்டியலிடுகிறார்கள்.

- காதல், வீரம், அறம், பக்தி, பாசம் முதலியவற்றைப் பற்றி பேசுபவை பழைய இலக்கியங்கள்.
- வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுபவை இன்றைய இலக்கியங்கள்.

**மதிப்பீடு**

குழுக்களாகப் பிரித்து இலக்கிய வகைகளையும் முற்கால தற்கால இலக்கிய வேறுபாடுகளையும் பற்றிக் கலந்துரையாடல் செய்தபின், ஒரு குழுவின் செயல்பாட்டையும் விடையிறுத்த முறையினையும் மற்றொரு குழு மதிப்பிடல்.

மாணவர் பங்களிப்பையும் அவர்கள் குறிப்பெடுத்த தன்மையையும் ஆசிரியர் மதிப்பீடு செய்து, தமது குறிப்பேட்டில் பதிவு செய்தல்.

**கற்றல் அடைவுகள்**

அன்றைய - இன்றைய இலக்கியங்களின் தன்மையை வேறுபடுத்திப் பார்த்துப் பட்டியலாகத் தயாரிக்கும் திறன் பெறுகிறார்கள்.

மாணவரின் கற்றல் அடைவுகளைப் பற்றிய தகவல்களை ஆசிரியர் தமது மதிப்பீட்டு ஏட்டில் குறித்தல் வேண்டும்.

**குழுக்கலந்துரையாடல்**

ஓர் இலக்கியத்தின் அம்சங்கள் அல்லது கூறுகள் எவை எவை எனக் குழுவாக மாணவர்கள் கலந்துரையாடுகிறார்கள். கீழ்வரும் வினாக்களைத் தொடுத்துக் கலந்துரையாடலைத் தொடங்கலாம்.

- வெறும் சொற்கள் மட்டும் இலக்கியம் ஆகுமா?
- வெறும் கருத்து மட்டும் இலக்கியம் என்று அழைக்கப்படுமா?
- உள்ளதை உள்ளவாறே சொல்வது மட்டும் போதுமா?

ஆசிரியரின் வழிகாட்டலின் பேரில் கீழ்வரும் கூறுகளைப் பட்டியலிடுகின்றனர்.

- கருத்து
- உணர்ச்சி
- கற்பனை
- வடிவம்

செய்யுள் அடிகளுக்கு ஆசிரியர் விளக்கம் அளிக்கிறார்.

- உற்றுழி - தேவைப்படும் இடத்தில்
- பிற்றைநிலை - பழைய நிலை
- முனியாது - மாறுபடாது

**மதிப்பீடு செய்தல்**

**அ. தன் மதிப்பீடு**

கீழ்வரும் வினாக்களுக்கு மாணவர்கள் விடை எழுதி அவர்களே மதிப்பீடு செய்கிறார்கள்.

I. இலக்கியக் கூறுகளில் உயிர் போன்றது எது?

1. கருத்து  2. உணர்ச்சி  3. கற்பனை  4. வடிவம்

II. வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசுவது ................................ இலக்கியங்கள் (சங்க கால / தற்கால)

III. “கருத்தில்லா இலக்கியம் உயிரில்லா உடம்பைப் போன்றது.” - இக்கூற்றை மதிப்பீடு செய்க.

**ஆ. ஆசிரியர் மதிப்பீடு**

'பண்டைய இலக்கியங்கள் உன்னதமான கருத்துகளை எடுத்தியம்பின' என்னும் கருத்தைக் கட்டுரை வடிவில் சான்று காட்டி மாணவர்கள் எழுதுகிறார்கள். கீழ்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் கட்டுரையை மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டுப் பதிவேட்டில் பதித்தல்.

- முன்னுரை
- கருத்து (இலக்கிய விளக்கம், கூறுகள், எடுத்துக்காட்டுகள்)
- மொழிநடை
- கருத்துக்கோவை
- பத்தியமைப்பு
- கையெழுத்து
- முடிவுரை

**கற்றல் அடைவுகள்**

இலக்கியக் கலையின் கூறுகள் பற்றிக் குறிப்புகள் தயாரிக்கும் திறனைப் பெறுகிறார்கள். கருத்தே இலக்கியத்தின் உயிர் என்பதைக் கருத்துருவாய்க் கொள்கிறார்கள்.

**குழுக் கலந்துரையாடல்**

உணவின் சுவைகள் ஆறு பற்றியும் கலந்துரையாடி, மெய் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள், அதாவது உடம்பில் தோன்றும் உணர்ச்சி மாற்றங்கள் அல்லது சுவை மாற்றங்கள் பற்றிக் குழுக்களாகப் பிரிந்து உரையாடல்.

**குறிப்பு :**

தமிழ் இலக்கண நூலாம் தொல்காப்பியம் குறிப்பிடுவது எட்டு, வடநூலார், எட்டுடன் சமநிலை (சாந்தம்) என்னும் ஒன்றையும் சேர்த்து ஒன்பது (நவசரம்) என்பர்.

மாணவர்கள் கலந்துரையாடி, உணவுச் சுவையிலிருந்து வேறுபட்டது உணர்வுச்சுவை என்னும் தெளிவான அறிவு பெறுகிறார்கள்.

உணவுச் சுவை ஆறு.

- இனிப்பு
- புளிப்பு
- கசப்பு
- எரிப்பு
- உவர்ப்பு
- துவர்ப்பு

சமநிலை என்னும் உணர்வு உயிரிலிக்கே உரியது என்றும் உயிருடம்புக்கு இல்லை என்றும் ஆதலால் தமிழிலக்கணமே உயர்ந்தது என்றும் ஏதேனும் மாணவர் கூறினால் பாராட்டலாம். இல்லையேல் ஆசிரியர் விளக்கலாம்.

**உணர்வுச் சுவை எட்டு**

- நகை (சிரிப்பு)
- அழுகை (கவலை)
- இளிவரல் (எள்ளல், கேலி, பரிகாசம், கிண்டல்)
- மருட்கை (வியப்பு)
- அச்சம் (பயம்)
- பெருமிதம் (கம்பீரம், வீரம்)
- வெகுளி (கோபம்)

**எண்வகை மெய்ப்பாடுகள்**

(எட்டுவகை உணர்வுச் சுவைகள்)

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை
என்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப”
- தொல்காப்பியம் - பொருள் - மெய் 3

இலக்கியச் சுவைகள் பாடப்பகுதியின் நான்காம் பத்தியாகிய உணர்ச்சி பற்றிய பொருளை மாணவர்கள் வாசிக்கிறார்கள். கலந்துரையாடித் தெளிவுபெறுகிறார்கள்.

**மதிப்பீடு**

**அ. தன் மதிப்பீடு**

கருத்துக்கு அடுத்தப்படியாக இலக்கியத்தில் அமைய வேண்டிய முக்கியக் கூறு எது?

- கற்பனை
- வடிவம்
- மொழிநடை
- உணர்ச்சி

இளிவரல் என்பதன் பொருள் எது?

- இரக்கம்
- வஞ்சகம்
- கேலி செய்தல்
- இன்பமூட்டுதல்

**இ. ஆசிரியர் மதிப்பீடு**

'மெய்ப்பாடு எட்டு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுகிறார்கள்.
(ஒவ்வொரு மெய்ப்பாடு குறித்தும் சில எடுத்துக் காட்டுகள் விடையின் அளவுகோலாக எதிர் பார்க்கப்படுகின்றன.
எ.கா.: வாலிவாதம், கலிங்கத்துப்பரணியில் படைகள் மோதல், தெனாலிராமன் கதைகள் போன்றவை)

**கற்றல் அடைவு**

- இலக்கியக் கலையின் பாடுபொருள் பற்றி விவாதம் செய்கிறார்கள்.
- நாளிதழ்களுக்குக் கட்டுரையாக எழுதி வழங்குகிறார்கள்.

**கருத்தரங்கம் நடத்துதல்**

மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து இலக்கியத்தின் பாடுபொருள்கள் குறித்துக் கலந்துரையாடச் செய்தல்.

- இன்பம்
- காதல்
- வீரம்
- அவலம்
- நகைச்சுவை
- பக்தி

'உள்ளத்துள்ளது கவிதை இன்பம் உருவெடுப்பது கவிதை' என்னும் கவிமணியின் மேற்கோள், 'காதல் காதல் காதல்; காதல் போயின் காதல் போயின் சாதல் சாதல் சாதல்' என்னும் பாரதியின் பாடல், 'உரிமை மேல் ஆண்மை (வீரம்) பாராட்டார் சாந்தம்' என்னும் சுந்தரனார் பாடல் வரி, 'இனி என்று காண்பேன்!' என்னும் தேசிக விநாயகம் பிள்ளையின் தொடர், 'உச்சிபோய் தன் வால் பார்க்கும் (குரங்கு) என்னும் பாரதிதாசனார் சொல்லாட்சி, 'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்' எனும் மணிவாசகர் பக்தி போன்ற மேற்கோள்களைக் காட்டிப் பாடுபொருள்களை ஒழுங்குபடுத்தல்.

பாடப்பகுதி பத்தி 5, 6, 7, 8, 9, 10 முறையே (இன்பம், காதல், வீரம், அவலம், நகைச்சுவை, பக்தி) ஆகியவற்றை ஒவ்வொரு குழுவும் வாசித்தல்.
நூலகத்திலுள்ள நூல்கள் வழியும், இணையம் வழியும் பல்வேறு தகவல்களை இந்தத் தலைப்பில் சேகரித்துவரச் செய்தல்.
கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்தல், பாடுபொருள்களை முன்வைத்துக் கட்டுரைகளைத் தொகுத்துக் கருத்தரங்கம் நடத்துதல்.

**மதிப்பீடு**

நடத்திய கருத்தரங்கில் மாணவர் பங்கெடுத்ததன் அடிப்படையில், கீழ்க்காணும் மதிப்பீட்டு அளவுகோல்களால் மதிப்பீடு நடத்துதல்.

- தகவல்கள் சேகரிப்பில் ஆர்வம்
- தகவல் சேகரிக்க நாடிய ஊடகங்கள்
- எழுத்து நடை
- கருத்துக்கோவை
- வாசித்த முறை (தெளிவு, ஏற்ற இறக்கம், உச்சரிப்பு)
- வினாக்களுக்கு விடையளித்த முறை

**கற்றல் அடைவுகள்**

இலக்கியத்தில் நகைச்சுவை, பக்தி, அவலம், வீரம், காதல் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் தயாரிக்கிறார்கள்.
கருத்தரங்கில் பங்கேற்கிறார்கள்.
இதழ்களுக்கு அனுப்புகிறார்கள்.
பள்ளி ஆண்டுவிழா மலரில் இடம் பெற ஏற்புடைத்தாக்குகிறார்கள்.

**குழுக் கலந்துரையாடல்**

நகைச்சுவை என்பது இலக்கிய வகைகளில் ஒன்றாக வைத்திருப்பதன் நோக்கம் பற்றிக் கலந்துரையாடிக் கீழ்க்காணும் முடிவுகளுக்கு வருதல்.

- நகைச் சுவை என்பது சுவை கூட்டுவது.
- பொழுதுபோக்குக்காக அன்று.
- தரம் குறைந்த சொற்களைப் பயன்படுத்திச் சிரிக்க வைப்பதற்காக அன்று.
- சமூக நன்மை பற்றிச் சிந்திப்பதற்காக.
- மனஅழுத்தம் குறைத்து இன்பம் ஊட்டுவதற்காக.

'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் நூலைப் பற்றி ஆசிரியர் முன்னுரை வழங்கல்

- நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் மரபில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த சில நடைமுறைகளைக் கண்டித்தல்.
- மான்மியம் என்பதற்கு மகிமை எனும் பொருள் விளக்கம் அளித்தல்.
- நகைச்சுவையை அருமையாகக் கையாளுதல்.

**விவாதம் செய்தல்**

இன்று நாட்டில் நடக்கும் சில ஊழல்களையும் கையூட்டுகளையும் பற்றி விவாதித்தல்.

- வேலை வாய்ப்பில் கையூட்டு
- தொழிலில் ஊழல்
- உற்பத்தியில் ஊழல்
- அன்றாட நடைமுறையில் கையூட்டு

நீதி மன்றத்தில், பத்திரப் பதிவு அலுவலகத்தில் என ஒவ்வொருவருக்காக நல்கும் கையூட்டுப் பற்றி விடைகள் வருவித்தல்.

நீதி மன்றத்தில் உள்ள கையூட்டுகள்.

- சாட்சிப் படிகள்
- சமன்ஸ் படிகள்
- கமிஷன் படிகள்
- வாரண்ட் படிகள்
- வக்காலத்துப் படிகள்
-
-

எனப் பல ......

### குழுச் செயல்பாடு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து மருமக்கள் வழி மான்மியம் பாடப்பகுதியை வாசிக்க வைத்தல். கடினச் சொற்களுக்கு ஆசிரியர் பொருள் நல்குதல். வடமொழி எழுத்துகளைத் தமிழில் தருதல்.

| வடமொழி / ஆங்கிலம் | தமிழ் | பொருள் |
|---|---|---|
| சாஷி | சாட்சி | நேரடிப்பார்வை, நேரடிக் கேள்வி |
| சமன்ஸு | சமன்சு | அழைப்பு |
| ஜப்தி | சப்தி | பறிமுதல் |
| பீஸு | பீசு | கட்டணம் |
| ------ | பார இழவு | வெறுப்பை வெளிக்காட்டும் ஒரு குறிப்புச் சொற்றொடர் |
| ------ | மகமை | மகிமை / கீர்த்தி |
| பாரம் | விண்ணப்பப் படிவம் | ------ |

இந் நகைச்சுவைப்பாடத்தின் நோக்கம் என்ன எனக் கலந்துரையாடிக் கீழ்க்காணும் கருத்துகளில் மாணவர் ஒன்றுதல்.

- வழக்குகளுக்குப் போகாதே
- விட்டுக்கொடு
- சமாதானம் செய்துகொள்
- நீதிமன்றம் ஏறாதே
- ஏமாற்றுவோரிடம் ஏமாறாதே
- பொருளை இழக்காதே
- ஒவ்வொரு குழுவும், இப்பாடலில் 'நகைச்சுவையால் நற்கருத்து' என்னும் தலைப்பில் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.
- கவிதையை உரைநடையாக வடிவமாற்றம் செய்கிறார்கள்.

**மதிப்பீடு**

ஒவ்வொரு குழுவும் தயாரித்துள்ள குறிப்புகளையும் வடிவ மாற்றத்தையும் வகுப்பில் வாசித்து, குழு மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டு அளவுகோலாகக் கீழ்க்காண்பவற்றைக் கொள்ளுதல்.

- நகைச்சுவையால் நற்கருத்து
- நகைச்சுவைக்கு விளக்கம்
- நகைச்சுவையின் பயன்
- நகைச்சுவையை அறிமுகம் செய்யும் முறை
- சொல்லாற்றல்
- நகைச்சுவை வழிக் கருத்துத்தெளிவு
- சமூகத்துக்கு விடுக்கும் செய்தி

**கற்றல் அடைவுகள்**

- பலவிதமான நீதிமன்றக் கட்டணங் களைப் பட்டியலிடுகிறார்கள்.
- நகைச்சுவை சமூகக் கேடுகளைச் சுட்டிக் காட்டி மக்களுக்கு நன்மை பயக்கிறது எனும் அடிப்படையில் குறிப்புகள் எழுதுகிறார்கள்.
- நகைச்சுவையைத் தமிழ்மொழியில் எவ்வாறு கையாள்வது என்னும் திறன் பெறுகிறார்கள்.
- வடிவமாற்றம் செய்கிறார்கள்.

**நாடகம் நடித்தல்**

‘ஏமாறாதே; ஏமாற்றாதே’ என்னும் திரைப்படப் பாடலின் கருத்தை மாணவர்கள் அலசுகிறார்கள். சமூகத்தில் நடைபெறும் ஏமாற்று வேலைகளைப் பட்டியலிடுகிறார்கள்.

- வெளிநாடு செல்லப் பணம் பறித்தல்.
- பிணத்தை வைத்துக் கொண்டே மருத்துவம் பார்ப்பதாக ஏமாற்றுதல்.
- மருந்திலேயே கலப்படம் செய்தல்.

**செயல்பாடு**

நாடகம் நடிப்பதற்குரிய களம், கருவி, ஆடை அலங்காரம், பொருள்கள் முதலியவற்றைத் தயார்செய்து நடித்தல். ஏனைய மாணவர்கள் பார்வையாளர் களாகப் பங்கெடுத்தல்

வந்த நோயாளியை ஏமாற்றும் ஒரு மருத்துவரையும் இறுதியில் மருத்துவரையே மடக்கும் நோயாளியையும் பற்றிய ‘வைகுண்ட வைத்தியர்’ என்னும் நகைச்சுவை நாடகத்தைக் குழுக்களாய்ப் பிரிந்து, படித்து நகைச்சுவை உணர்வு பெறுகிறார்கள். நடிக்கத் தயாராகிறார்கள்.

- பாத்திரங்களைத் தேர்வு செய்தல்
- ஏற்ற இறக்கத்தோடும் முக பாவத்தோடும் படிப்பதில் பயிற்சி பெறுதல்.
- நடிப்பில் பயிற்சி பெறுதல்.

- பேச்சில் இயல்பு
- நகைச் சுவை வெளியீடு
- முக பாவம்
- சொல் திருத்தம்
- இட அசைவு
- அங்க அசைவு

**மதிப்பீடு**

அனைத்து மாணவர்களும் கீழ்க்காணும் மதிப்பீட்டு அளவுகோல்களின் அடிப்படையில் நாடகத்தை மதிப்பிடு கிறார்கள், விமர்சனம் எழுதுதல்.

ஆசிரியர், மாணவர் எழுதிய விமர்சனக் குறிப்புகளை ஆய்வு செய்து, ஆலோசனைகள் வழங்கிச் செம்மைப்படுத்தி, செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பதிவு செய்யச் செய்தல்.

**கற்றல் அடைவு**

- நாடகம் நடிக்கும் திறனை வளர்க்கிறார்கள்.
- ஏற்ற இறக்கப் பேச்சில் வல்லவர்கள் ஆகிறார்கள்.
- நாடகக் கூறுகளைப் புரிந்துகொள்கிறார்கள்.

'பிறரை ஏமாற்றக் கூடாது', 'நாம் பிறரிடம் ஏமாறக்கூடாது', 'உலக நடப்புகள் பற்றிய அறிவு நமக்கு வேண்டும்' போன்ற சில நல்ல கருத்துகளை உருவாக்கம் செய்து குறிப்பேட்டில் எழுது கிறார்கள்.

எடுத்துக்காட்டுகளால் புணர்ச்சி, சிலேடை, எச்சவினை, உடம்படுமெய் இவை பற்றிய தெளிவு பெறுகிறார்கள்.

- ’பாயும் கடிக்கும் பசுகருவா டும்புசிக்கும்’

  **புலி** : பாயும், கடிக்கும்; பசு, கருமையான ஆடு இவற்றைச் சாப்பிடும்.

  **எலி** : பாயும், கடிக்கும்; பசுமையான கருவாட்டைச் சாப்பிடும்.

  எனவே, புலியும் எலியும் ஒன்று.

  இது சிலேடை எனப்படும்.
- வந்த, போன, பறந்த, ஓடிய போன்றவை தாமாகவே முடிவு பெறாமல், ஏதேனும் ஒரு பெய ரைக் கொண்டு முடிவுபெறுவதால் பெயரச்சம்.
- வந்து, போய், பறந்து, ஓடி போன்றவை வினையைக்கொண்டு முடிவு பெறுவதால் வினையெச்சம்

**மதிப்பீடு**

மாணவர் எழுதும் எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய் தல். ஏதேனும் இரு பொருள்களையும் ஒத்த தன்மையால் சமம் என எழுதுவதின் அடிப்படையில் மதிப்பிடுதல்.

- தென்னை + மரம் = தென்னைமரம் (இயல்புப்புணர்ச்சி); கரி + துண்டு = கரித்துண்டு (தோன்றல் விகாரப்புணர்ச்சி); கல் + பாறை = கற்பாறை (திரிதல் புணர்ச்சி); மணம் + மாலை = மணமாலை (கெடுதல் புணர்ச்சி).
- மணி + அடி = மணியடி; வந்த + அரசர் = வந்தவரசர் இவ்வாறு இரண்டு உயிரெழுத்துக்கள் புணரும்போது இடையில் ய், வ் ஆகிய எழுத்துக்கள் தோன்றுவதே உடம்படுமெய்.

### அலகு இறுதிச் செயல்பாடு

'சுவைகளின் கலவை' என்னும் தலைப்பில் மாணவர்கள் கருத்தரங்கம் நடத்துகிறார்கள்.

இவ்வலகின் மூலம் பெற்ற கருத்துகளின் அடிப்படையில் அனைத்து மாணவர்களும் கட்டுரைகள் தயாரிக்க வேண்டும். மாணவர்கள் குழுக்களாய்ப் பிரிந்து, தத்தம் கட்டுரையைக் குழுவில் வாசித்தல் வேண்டும். கட்டுரைகளின் அமைப்பை ஆசிரியர் துணையுடன் விவாதித்து, மேம்படுத்தி, குழுவிற்கு ஒருவர் எனக் கருத்தரங்கில் கட்டுரை படிக்க வேண்டும்.

மாணவரின் தனித்திறன்களை ஆசிரியர் திட்டக்குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

### தொடர் மதிப்பீடு

- விவாதம்
- நாடகம் நடித்தல்
- குழுவில் செயல்படும் தன்மை

### பருவ மதிப்பீடு

- குறிப்புகள்
- தொகுப்புகள்
- கட்டுரைகள்
- சுயபடைப்புகள்

## பாடவிளக்கம்

### குறுந்தொகை - 300

குவளை மலரின் மணத்தை வீசுகின்ற தேன் பொதிந்த சிவந்த வாயையும் ஆழமாகிய நீரில் வளர்ந்த தாமரைப் பூவின் தாதைப் போன்ற நுண்ணிய பல தேமல் புள்ளியையும் உடைய மாமை நிறமுடையோய், நீ நான் பிரிவேன் என்று கருதி அஞ்சாதே. இறுகிய காலையுடைய அன்னப் பறவைகள் குவியும் மணலின் கண்ணே தங்கியிருக்கும் கடல் வளைந்த நில வட்டத் தைப் பெறினும் நின்னைக் கைவிடுதலை நினையேன்.

### குறுந்தொகை - 49

அணிலின் பல்போன்ற முள்ளையுடைய சுழி முள்ளிச் செடியையும், நீல மணி போன்ற நீரையும் கொண்ட கடல் நாடனே, இப்பிறவி நீங்கி மறு பிறவியிலும் நீயே என் நெஞ்சுக்குகந்த காதலன். நானே உன் மனமுவந்த காதலியாகுக என்றாள் தலைவி.

**பட்டினப்பாலை**

தலைவன் பொருள் வயிற்பிரிவு காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்ல நினைக்கிறான். தலைவி மேலுள்ள மிகுதியான அன்பு காரணமாக, அவன் நெஞ்சம் அவளைப் பிரிய மறுக்கிறது. அப்போது சோழ நாட்டை ஆண்ட திருமாவளவனின் சிறப்புடைய நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தையே நன்கொடையாகப் பெறுவதாக இருந்தாலும், நான் என் காதலியைப் பிரியமாட்டேன் என்று தன் நெஞ்சோடு கூறுகிறான் காதலன்.

**புறநானூறு - 72**

**துறை: வஞ்சினக் காஞ்சி**

சிரிக்கத்தக்கவரே என பகைவன் நாட்டைச் சிறப்பித்துக் கூறுவர். இளையவன் என்றும், ஒலிக்கும் மணியை உடைய உயர்ந்த நல்ல யானையும், தேரும் குதிரையும் கருவிகளில் பழகிய வீரரும், நாங்கள் உடையேம் என்றும் என் வலிமைக்கு அஞ்சாமல் பகைச்சினம் கொண்டு, இகழும் சொற்களைச் சொல்லிய வேந்தரைப் போர்க்களத்தில் சிதறி ஓடுமாறு போரிட்டு அவர் முரசத்துடன் சிறைப்படுத்துவேன். அவ்வாறு செய்யேன் என்றால் சிறப்புப் பொருந்திய என் குடையின் கீழ் வாழ்பவர் சென்று தங்கும் நிழலைக் காணாமல், எங்கள் வேந்தன் கொடியவன் என்றெண்ணி என் மக்கள் கண்ணீர் வடித்து என்னைப் பழிக்கும் கொடுங்கோல் உடையவன் ஆவேனாக! (எனக்குப் பகை ஆனவரை இன்னது செய்வேன், இல்லையேனில் இன்ன தன்மையன் ஆவேன் எனச் சொல்லுதல்).

**கலிங்கத்துப்பரணி**

போர்புரியும் வாளைப் பிடித்த பெரிய கைகள் எங்கே? அழகிய மார்பு எங்கே? போர்முகத்தில் எத்தகைய வீரர்கள் எதிர்த்து வந்தாலும் முதுகுகாட்டி ஓடாத பருத்த (மிக்க) வலிமையை உடைய தோள்கள் எங்கே? எங்கே? என்று பைரவியைக் கேட்பாளைக் காணுங்கள்! காணுங்கள்!
(கை, மார்பு, தோள் இவை எங்கே என்று வினவுதலால் அவற்றை நாய், நரிகள் முன்பே இழுத்துச் சென்றன என்பது விளங்கும்)

**மனோன்மணியம்**

பாண்டிய மன்னன் ஜீவகன் சேரர் படையுடன் போரிடவிருக்கும் தம் படை வீரர்களை நோக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடப்பகுதி,
“வீரர்களே! நடக்கவிருக்கும் போரில் உங்களுக்குப் பகைவீரர்களின் வாள்பட்டுக் காயம் ஏற்பட்டால், அதனைக் காயமாகக் கருத வேண்டாம். உங்கள் வீரத்தில் மனம் மகிழ்ந்து வெற்றித் தேவதை உங்களுக்கு அளித்த முத்தத்தின் முத்திரையாகக் கருதுங்கள். இந்த அடையாளங்கள் தலைமுறை தலைமுறையாய் உங்கள் ஆற்றலின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருக்கும். போரில் ஏற்படுகின்ற காயத்தை ஒரு புண்ணாகக் கருத வேண்டாம். அது புகழின் அடையாளம் என்று பெருமைப்படுங்கள். இத்தகைய அருமையான ஒரு வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை” எனத் தம் படை வீரர்களுக்கு வீராவேசமூட்டுகிறான் பாண்டிய மன்னன் ஜீவகன்.

### சிலேடை

**ஊசியும் திங்களும்**

**சொல் பொருள்**

கலை- பிறை, ஆடை, தாரம் - விண்மீன், நூல்

பாடல் பொருள்:

சிவபெருமானைப் போற்றிப் பூசிக்கும் முருகா, பழமையான இவ்வுலகில் சந்திரப் பிறையானது (கலையானது) மெதுவாக இரு பக்கங்களிலும் வளர்ந்து செல்லும். ஊசியானதும் ஆடையின் (கலையின்) இரு பக்கங்களையும் (கிழிந்த இரு துண்டுகளையும்) தைக்க மெதுவாக முன்னேறிச் செல்லும்.

சொல்லத்தகும் விண்மீன்கள் (தாரம்) சந்திரனைச் சுற்றியிருக்கும். நூல் (தாரம்) ஊசியைச் சுற்றி யிருக்கும். ஆகவே சந்திரனும் ஊசியும் சமம் என்று சொல்வோமாக.

**புறநானூறு - 112**

**துறை : கையறு நிலை**

சென்ற நிலவு நாளில் நாங்கள் எங்கள் தந்தையை உடையவராக இருந்தோம். எங்கள் மலையையும் பிறர் கைப்பற்றவில்லை. இப்போது இந்நிலவு நாளில் எங்கள் மலையை மூவேந்தரும் சேர்ந்து கைப்பற்றி விட்டனர்.நாங்கள் எங்கள் தந்தையை இழந்ததால் எதுவும் இல்லாதவர்களாக நிற்கின்றோம். (பாரியின் இழப்பை நினைத்து அவனது மக்கள் ஏங்கிப் பாடுவது. தலைமகன் இறக்க அவன் பெருமை சொல்லி வருந்தி நிற்றல்)

**நற்றிணை - 184**

**தாயின் பிரிவுத்துன்பம்**

அறிவுடையீர்! யான் ஒரு மகள் உடையவள். அந்த ஒரு மகளும் போர் வலிமை மிக்க கூரிய வேலை ஏந்திய காளை ஒருவனோடு பெரிய மலையிலுள்ள அரிய வழியில் நேற்றுச் சென்றுவிட்டாள். "இனி உன் துயரத்தைப் பொறுத்துத் தாங்கிக் கொள்க" என்று ஆறுதல் சொல்கின்றீர்கள். அது என்னால் எவ்வாறு முடியும்? என் மையுண்ட கண்ணின் கருமணியில் வாழும் பாவை வெளியே வந்து நடை கற்றது போல என் அழகிய தன்மையுடைய இளமகள் விளையாடிய நீலமணி போன்ற நொச்சியையும் திண்ணையையும் கண்டு அவளை நினைத்தால் உள்ளம் வேகின்றதே.

நொச்சி - சிற்றில் இழைத்துச் சிறு சோறிட்டு விளையாடிய இடம்

திண்ணை - கிழங்கு, பல்லாங்குழி விளையாடிய இடம்.

**திருக்குறள்**

நினைத்தேன் என்றேன்; நீர் மறந்ததாலல்லவோ நினைக்க வேண்டும். என்னை மறந்தீரோவென்று பிணங்க விரும்பித் தழுவாதிருந்தனள்.

**கலிங்கத்துப்பரணி**

இழுதைப் பேய்க்குக் கூழ் வார்த்தல்

உதவாத ஓட்டைப் பாத்திரத்தில் ஊற்றிய கூழானது வெளிப்பக்கம் ஒழுகுதலைத் திருப்பிப் பார்த்து அந்தப் பாத்திரத்திலுள்ள கூழ் எல்லாவற்றையும் கவிழ்த்துவிட்டு ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைப்படைந்து இருக்கும் மூடத்தன்மையையுடைய பேய்க்கு வாரீர்.

(கூழ் ஒழுகுதற்குக் காரணம் ஓட்டைப் பாத்திரமென்பதையும், அதனைத் திருப்பினால் அதிலுள்ள கூழ் எல்லாம் போய்விடும் என்பதையும் அறியாமையால், அப்பேயை இழுதைப் பேய் (மூடப்பேய்) என்றார்.)

**சிலம்பு : ஆய்ச்சியர் குரவை**

மூவுலங்களும் இரண்டு அடிகளுக்கு நிரம்பும் தன்மையின்றி மூவடியால் தாவி அளந்த அந்தச் சிவந்த அடிகள் நடத்தலால் சிவக்கும் வண்ணம், தம்பியுடன் காட்டிற்குச் சென்றான். சோ என்னும் மதில் அரணும் அதன் உள்ளே உள்ளாரும் போரிலே அழியுமாறு பழைய இலங்கையின் காவலைத் தொலைத்த அந்த வீரனது புகழைக் கேளாத செவி, என்ன செவி? அத்திருமாலின் சிறப்பைக் கேளாத செவி என்ன செவி?

**சுந்தரர் தேவாரம்**

'பித்தா பிறைசூடி................... எனலாமே"
பித்தனே, பிறைசூடியவனே, பெருமை உடையவனே, அருளாளனே, பெண்ணையாற்றின் தெற்கேயுள்ள திருவெண்ணைய் நல்லூரிலுள்ளதாகிய அருள்துறை என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, எனது நெஞ்சத்துள் உன்னை அகலாது வைத்தருளினாய். அதனால் உன்னை எவ்வாற்றானும் மறவாமலே நினைத்து, உனக்கு என் முன்னோர் எழுதித் தந்த அடிமைச் சாசனப்படி அடிமையானேன். இப்பொழுது, இந்த அடிமைச் சாசனத்தை கிழித்தெறிந்த பிறகு, உனக்கு நான் அடியவன் அல்லேன் என நான் எதிர்வழக்குப் பேசியது, பொருந்துமோ? எனது பிழையைப் பொறுத்தருள்க" என்றார் சுந்தரர்.
கதை : கைலாசத்தில் சிவபெருமானுடன் சுந்தரர் வாழ்ந்த போது அவர் இரு பெண்களை விரும்பினார். சிவன் சுந்தரரைச் சபித்து மண்ணுலகம் அனுப்பினார். இங்குச் சுந்தரருக்குத் திருமண ஏற்பாடு நடந்தபோது வேதியர் வடிவில் சிவன் தோன்றி அடிமைச் சாசன ஓலையைக் காட்டி, அடிமை எனக் கூறித் திருமணத்தைத் தடுத்தார். ஓலையைச் சுந்தரர் வாங்கிக் கிழித்தார்.
நான் உனக்கு அடிமை இல்லை என்று எதிர் வழக்காடினார். ஆனால், கிழித்த ஓலை நகல் என்றும் மூல ஓலை திருவெண்ணெய் நல்லூரில் உள்ளது என்றும் கூறி, அங்கு அழைத்துச் சென்று அதைக் காட்டினார். சுந்தரர் ஒத்துக்கொண்டார். நான் அடிமையில்லை என்றது தவறல்லவோ! பிழை பொறுத்தருள்க! என வேண்டினார்.
நல்லூரருட்டுறை - நல்லூர் + அருள் + துறை.

**குலசேகரப் பெருமாளின் பெருமாள் திருமொழி**

'ஆனாத......................... ஆவேனே'
பொருள் : அழியாத அழகாகிய செல்வத்தையுடைய பெண்கள் தன்னைச் சூழ்ந்துநிற்க, விண்ணுலகை ஆளுகின்ற செல்வத்தை நான் விரும்பமாட்டேன் அதற்குப் பதில், தேன் மிக்க மலர்கள் உள்ள சோலைகளையுடைய திருவேங்கட மலையிலிருக்கிற நீர்ச்சுனையில் ஒரு மீனாய்ப் பிறக்கத்தக்கப் பயனை உடையவனாவேன்.

## மருமக்கள் வழி மான்மியம்

### பாட விளக்கம்

'மருமக்கள் வழி மான்மியம் என்னும் கவிதையை ஆசிரியர் எளிய கவிதை நடையில் எள்ளல் கலந்த நகைச்சுவை உணர்வுடன் படைத்துள்ளார். இக்கவிதை சமுதாயச் சீர்கேடுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சமுதாயத்தில் கொடுக்க வேண்டாத பல கட்டணங்களையும் சுட்டிக்காட்டுவதுடன் தேவையற்ற கட்டணங்கள் வசூலிப்பதையும் இகழ்ந்துரைக்கின்றார். மாணவர்களைச் சிரிக்கச் செய்வதுடன் சிந்திக்கவும் தூண்டுகிறார் ஆசிரியர்.

சிறு சிறு பிரச்சினைகளுக்காக நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டாம் எனப் பொதுமக்களை அறிவுறுத்துகின்றார். அதுமட்டுமல்லாமல் நீதிமன்றத்திற்குச் செல்பவர்களின் குடும்பப் பணம் எல்லாம் செலவாகிக் கடனாளியாகிக் குடும்பம் அழிந்துபோகும் என்ற தம் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

பிறரோடு சண்டை சச்சரவுகளுக்குப் போகக்கூடாது. இயன்றவரை சமாதானத்தோடு வாழ வேண்டும். சிறுசிறு சண்டைகளுக்காக நீதிமன்றத்திற்குச் சென்று பலவகைக் கட்டணங்களைப் பெருந்தொகையாகச் செலவிடுவதற்குப் பதில், நாம் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். அவ்வாறு விட்டுக் கொடுத்து வாழ்வதற்கான நல்ல மனப்பான்மையையும் நீதிமன்றம் செல்லாமலிருக்கத்தக்க வழிவகைகளையும் இறைவன் நமக்குத் தருவான் என்பதை உணர்ந்து அவரை வணங்குவோமாக! அவ்வாறு வணங்கினால் நமக்குத் துன்பம் எதுவுமில்லை. விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப்போவதில்லை.

## வைகுண்ட வைத்தியர்

### பாட விளக்கம்

‘வைகுண்ட வைத்தியர்’ என்ற நாடகத்தை நகைச்சுவை ததும்பப் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற வகையில் ஆசிரியர் எழுதியுள்ளார். இந்நாடகம் மூலம் ஆசிரியர் சமூகப்பிரச்சினையை வெளிப்படுத்தி விழிப்புணர்வுடன் வாழவேண்டுமென்பதை வலியுறுத்துகின்றார். சமூகத்தில் மருத்துவர்களைக் கடவுளாகக் கருதும் சூழல் இன்றும் காணமுடிகிறது. அவ்வைத்தியர்கள் மக்களின் அறியாமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் பணம் பறிக்கும் இழிசெயலை இந்நாடகம் தோலுரித்துக்காட்டுகிறது.

நாம் யாரிடமும் ஏமாறக்கூடாது என்பதையும் யாரையும் ஏமாற்றக் கூடாது என்பதையும் எடுத்துரைக்கின்றார். ‘ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்’ என்பதையும் குறிப்பாக உணர்த்துகிறார் ஆசிரியர்.

தேவையில்லாத மருத்துவச் செலவுகள், கூடுதல் கட்டணம் வசூலித்தல், அவசியமில்லாத பரிசோதனைச் செலவுகள் போன்ற மருத்துவத்துறையில் உள்ள வேதனையான செயல்களை ஆசிரியர் இந்நாடகத்தின் மூலம் மாணவர்களுக்கு உணர்த்துவதுடன் அவர்கள் விழிப்புணர்வு அடைய வேண்டுமென்பதையும் அறிவுறுத்துகிறார்.

# அலகுத் தேர்வு

### வினாக்கள்

1. நுமது பள்ளி ஆண்டுவிழாவில் 'இலக்கிய இன்பம்' என்னும் தலைப்பில் உரையாற்ற ஒரு சொற்பொழிவுக் குறிப்புத் தயாரிக்க.
2. 'இலக்கியத்தில் பாடுபொருள்' என்னும் பொதுத் தலைப்பின் கீழ் 'வீரம்' என்னும் உட்தலைப்பில் கருத்தரங்கில் பங்கேற்கத் தேவையான கருத்துகளைத் தொகுத்துத் தருக.
3. மாணவர்க்கான கட்டுரைப் போட்டி

| | | |
|---|---|---|
| ● வகுப்பு | : | 11 |
| ● தலைப்பு | : | கலைகளில் சிறந்தது இலக்கியம் |
| ● அளவு | : | இரண்டு பக்கம் |
| ● முதல் பரிசு | : | ரூ.1000 |
| ● கடைசி நாள் | : | ......................... |

மேற்காண்பது மாத இதழ் ஒன்றில் வெளியான விளம்பரம், கட்டுரை தயாரிக்கவும்.

4. ''வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசுவதில் பெரும்பங்கு வகிப்பது பண்டைய இலக்கியங்களே! தற்கால இலக்கியங்களே!'' - இது நுமது இலக்கியமன்ற விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பட்டிமன்றத் தலைப்பு. நீவிர் எவ்வணியில் பேச விரும்புகிறீர்? அதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுகளுடன் தருக.

5. நாடகம் எழுதுவதில் நுமக்கு ஆர்வம் உண்டு. அதில் புதுமைகளைப் புகுத்த விரும்புகிறீர். நாடகக் கலைஞர் ஒருவரைப் பேட்டிக் கண்டு நாடக உத்திகள் பற்றிக் கூடுதல் தெரிந்து கொள்ள ஆறு வினாக்களுக்கு மிகாமல் வினா நிரல் ஒன்று தயாரிக்க.

6. கீழ்க்காணும் சொற்றொடர்களை இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய நிலைகளில் பட்டியிலிடுக.

பற்பொடி, கரித்துண்டு, மணமேடை, மாமரம், கன்றுக்குட்டி, தென்றற்காற்று, அன்புள்ளம், பலாவேர், நிறமாற்றம், உறவுபெயர் அறஞ்செய்க, மட்குடம், மண்வளம்.

| இயல்பு | தோன்றல் | திரிதல் | கெடுதல் |
|---|---|---|---|
| | | | |

7. 'ஆடிக் குடத்தடையும்' என்னும் சொற்றொடரில் ஆசிரியர் கீழ்க்காணும் எந்த இரு பொருள்களைச் சிலேடையாகக் காட்டுகிறார்?

அ) பாம்பும் கீரியும் ஆ) பாம்பும் மயிலும்
இ) பாம்பும் எண்ணெயும் ஈ) பாம்பும் தண்ணீரும்

## குறிப்பு நூல்கள்


அம்மூவனார் - குறுந்தொகை
இராமலிங்கம்பிள்ளை வெ. - நாமக்கல் கவிஞர் பாடல்கள்
இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம்
கடியலூர் உருத்திரங்கண்ணனார் - பட்டினப்பாலை
கலியாண சுந்தரம் திரு. வி. - பட்டுக்கோட்டையார் பாடல்கள்
குலசேகரப் பெருமாள் - பெருமாள் திருமொழி
சுப்பிரமணியம் வ. அய். - காப்பியக்கட்டுரைகள்
சேக்கிழார் - பெரியபுராணம்
திருச்சி பரதன் - நாடகம் பலவிதம்
திருவள்ளுவர் - திருக்குறள்
தேசிக விநாயகம் பிள்ளை - மருமக்கள் வழி மான்மியம், ஆசியஜோதி
தொல்காப்பியர் - தொல்காப்பியம்
நமச்சிவாயர் கா. - நாடகம்
பாரதியார் - பாஞ்சாலி சபதம்
புலவர் அரசு - ஓரங்க நாடகங்கள் ஒருநூறு
பேராசிரியர் சுந்தரம்பிள்ளை - மனோன்மணீயம்
விசுவநாதம் கி.ஆ.பெ. - வீரம் (நாடகம்)
ஜெயங்கொண்டார் - கலிங்கத்துப்பரணி

## வளர்பகுதி

**அவலச்சுவை**

**(சிலப்பதிகாரத்தில் கண்ணகி கணவன் இறந்த செய்தி கேட்டு உள்ளம் பதைபதைத்தல்)**

ஊரரவம் கேட்கின்றது. கோவலன் கொலையுண்ட செய்தியை இடையர் கேட்டுப் பதறுகின்றனர். தனிமையில் தவிக்கும் கண்ணகி நிமித்தங்களைக் கண்டு துடிக்கின்றாள். தன் கணவன் கள்வனாம் என்று கொலை குறித்தனர் எனக் கூறக் கேட்கின்றாள். பொங்கி எழுந்தாள். விழுந்தாள். கைம்மை நோன்பு அதனால் வரும் துயரம், இளிவு, கணவன் மீதுள்ள பழி இவை நினைவிற்கு வருகின்றன. அரசன் தவறிழைத்தான்; கொடுங்கோலன்; செம்மையில்லாதவன் எனத் தூற்றுகின்றாள். காண்பேன் கணவனையென விரைந்து ஏகுகின்றாள். குருதியில் நனைந்து கிடக்கும் கணவனைக் காண்கின்றாள்

ஏங்குகின்றாள். ஒருவருமில்லா இவ்வூரில் மாலைப்பொழுதில் நன்மார்பு பொடியாடிக் கிடப்பதா?

யாரும் இல் மருள் மாலை இடர்உறு தமியேன் முன்
தார்மலி மணிமார்பம் தரை மூழ்கிக் கிடப்பதோ?
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறு இழைப்ப
ஈர்வது ஓர்வினை காணா இது என உரையாரோ?
கண்பொழி புனல் சோரும் கடும்வினை உடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடி ஆடிக் கிடப்பதோ?
மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறு இழைப்ப
உண்பது ஓர் வினை காணா இது எனவுரையாரோ?

(இளங்கோவடிகள் – சிலப்பதிகாரம்

நூல் ; காப்பியக் கட்டுரைகள் – வ.அய். சுப்பரமணியம்

கட்டுரை சிலப்பதிகாரம் கதையமைப்பும் அவலச் சுவையும்

இவ்வூரில் தெய்வமும் உண்டு கொல்? சான்றோரும் உண்டுகொல்? என்று ஊரார் கேட்கப் புலம்புகின்றாள். கணவன் திருவடியைக் கையால் பற்றித் தொழுகின்றாள். வேந்தனைக் கண்டு, இத்திறம் கேட்பன் யான் என்று அரண்மனைக்கு விரைகின்றாள்.

**வீரச் சுவை**

தமிழ்ச்செல்வம் (டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம்) – நாடகம்

**காட்சி : 1**

இடம் : தெரு

(சேரரின் போர்ப்பறை முழங்குகிறது)

பறை அறிவிப்போன் : வளமுயர் சோழ நாட்டு மக்களே! கேளுங்கள். இன்றைக்கு ஏழாம் நாள் எங்கள் சேரர் படை இந்நாட்டின் மீது போர் தொடுக்கப் போகின்றது. ஆதலால் பசுக்கள் பெண்கள், குழந்தைகள். துறவிகள், பிணியாளர் ஆகியோர் அனைவரும் போர்க்களத்தை விட்டு ஒரு காத தூரம்போய் விட வேண்டும். இது எங்கள் சேர மன்னனின் ஆணை கலந்த வேண்டுகோள்.

(மீண்டும் பறை முழக்கம்)

ஒன்றாம் வீரன் : அடடா! என்ன கருணையப்பா சேர மன்னனுக்கு! போர் தொடுக்கப் போகிறானாம். குறிப்பிட்ட சிலர் வெளியேறிவிட வேண்டுமாம். (நகைக்கிறான்)

இரண்டாம் வீரன் : சிரிக்காதேயப்பா பலவீனர்களைக் கொல்லக் கூடாதென்பதற்காகத் தான் முன்னறிவிப்புச் செய்கிறான்.
ஒன்றாம் வீரன் : மற்றவர்களை மட்டும் கொல்லலாமா?
இரண்டாம் வீரன் : நமக்கு ஏன் இந்த வம்பு? இப்படிச் செய்வது அரசநீதி
ஒன்றாம் வீரன் : நீதியுள்ள அரசன், போர் தொடுக்காமலே இருக்கலாமே?
இரண்டாம் வீரன் : சேரன் சிறந்த அறிவாளி. போர் நேராமல் தடுக்கவே முயன்றிருப்பான். நமது சோழ மன்னரும் நேர்மை தவறாதவர். எப்படியோ, இவர்களுக்குள் பேச்சு முறிந்து போர் மூண்டுவிட்டது. நாம் என்ன செய்ய முடியும்?
ஒன்றாம் வீரன் : போர்! இப்போதுதானே போர் நடந்து முடிந்தது! மறுபடியுமா போர்?
ஒன்றாம் வீரன் : ஆமப்பா ஆமாம். சேரனுக்கு வரவரப் பேராசை பெருகிவிட்டது. அந்தப் பேராசைதான் பெரும்படையைத் திரட்டச் செய்து விட்டது. படைக்கருவிகளும் பெருகிவிட்டன. அடுத்து நடக்க வேண்டியது போர்தானே?
ஒன்றாம் வீரன் : முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும். வெறியைப் போரிட்டே ஒழிக்க வேண்டும். சோழ வீரர்கள் கோழைகளல்லர்.
இரண்டாம் வீரன் : ஆமாம், வலியச் சண்டைக்குப் போகக் கூடாது. வந்த சண்டையை விடக்கூடாது. ஒழியட்டும் சேரமன்னரின் போர் வெறி.
எல்லோரும் : உயரட்டும் புலிக்கொடி! கிளம்பட்டும் சோழர்படை
(சோழனின் போர்ப்பறை முழக்கம்)
பறை அறிவிப்போன் ; வாழப் பிறந்த சோழ மக்களே, சேரமன்னன் இந்நாட்டின் மீது படையெடுத்துவிட்டான். வேற்று மன்னனின் வெறியை முறிக்க வீட்டுக்கு ஒரு ஆள் தேவை. போர்க் கருவிகளுடன் புறப்படுங்கள். வீட்டுக்கொரு ஆண்மகன் நாட்டைக் காக்கப் புறப்படுக! இது சோழ மன்னரின் கட்டளை.
எல்லோரும் : போர்! போர்! உயரட்டும் புலிக்கொடி.
(பறை முழக்கம்)

**காட்சி 2**

**ஒரு குடும்பம்**

கணவன் : மைத்துனரே போர் என்றதும், தங்கள் புயம் வீங்குகிறதே!
மைத்துனன் : தங்கள் தோள்களும் விம்மிப் புடைக்கின்ற வேகத்தையல்லவோ காண்கிறேன்
கணவன் : ஆம்! போர்ப்பறை ஒலியைக் கேட்டதும் நமக்கு உண்மையிலேயே ஒரு தெம்பு உண்டாகிறதல்லவா?
மைத்துனன் : அது இந்த நாட்டு மண்ணின் இயல்பு. அத்தான், இப்போது போர்ப்பறை ஒலித்தது, இன்னும் சற்று நேரத்தில் போர் முரசு முழங்கப் போகிறது பாரும். போர் முரசு கேட்டதும். நமக்குள்ளயே ஒரு துடிப்பு வெறி உண்டாகும்.
கணவன் ; முரசொலி வெறியைக் கிளப்புமா? அதற்கு அவ்வளவு வன்மை உண்டா?
மைத்துனன் : ஆமாம், அந்த முரசு, எருமைக்கடாத் தோலினால் செய்யப்பட்டது தெரியுமா? சாதாரண எருமையல்ல. சண்டையில் உயிர் போகும்

அளவுக்குப் போரிட்டு, எதிரியைக் கொன்று, வெற்றிமாலை சூடி மகிழ்ந்து, வீறுடன் போர்க் களத்தை விட்டு வெளியேறும் போது, எந்த எருமை உயிர் விடுகிறதோ, அந்த வீர எருமைக் கடாவின் தோலைக் கொண்டுதான் போர் முரசு கட்டுவார்களாம். அந்த முரசை வைப்பதற்கு ஒரு கட்டில் உண்டு. அரசு கட்டிலுக்கும் முரசு கட்டிலுக்கும் ஒரே மரியாதைதான்.

(முரசொலிக்கிறது)

| | | |
|---|---|---|
| கணவன் | ; | அப்படியா? அதோ, போர் முரசு! |
| இருவரும் | : | போர்! போர்! |
| கணவன் | : | மைத்துனரே, போர் முரசு கொட்டிவிட்டது. இன்றைய முறைக்கு நான் போர்க்களம் புறப்படுகிறேன். செல்லம், எடு வாளை, |
| மைத்துனன் | : | இல்லை அத்தான். இன்றைய போருக்கு நான் முதலில் போகிறேன். தங்கைக்குத் துணையாக நீர் வீட்டில் இரும். |
| கணவன் | : | இல்லை இல்லை நான்தான் போக வேண்டும். |
| மைத்துனன் | : | முடியாது. ஒரு நாளிலேயே சேரர் படை சின்னா பின்னப்பட்டு ஓடினாலும் ஓடிவிடும். பிறகு எனக்குப் போரிடும் வாய்ப்புக் கிடைக்காது. |
| கணவன் | : | சொல்வதைக் கேளுங்கள். கண்டிப்பாக நான்தான் போர்க்களம் போக வேண்டும். செல்லம், இன்றைக்கு யார் போருக்குப் போக வேண்டும்? நான்தானே? நீயே சொல். |
| மைத்துனன் | : | இல்லை நான்தானே? |
| கணவன் | : | இல்லை இல்லை செல்லம், நான்தானே! உன் அண்ணனாயிற்றே என்று சொல்லாதே. |
| மைத்துனன் | : | உன் கணவனாயிற்றே என்று சொல்லாதே, செல்லம் நான்தானே? |
| மனைவி (செல்லம்) | : | (சிறிது யோசித்து) எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. உங்களில் யார் முதலில் வாளை எடுத்துக்கொண்டு வருகிறீர்களோ, அவர்தான் இன்று போருக்குச் செல்ல வேண்டும். |
| இருவரும் | : | சரி |
| செல்லம் | : | ஒன்று, இரண்டு, மூன்று<br>(இருவரும் ஓடுகின்றனர், மைத்துனர் வாளை முதலில் எடுத்து வருகிறார்) |
| மைத்துனன் | : | எப்படி? வெற்றி எனக்குத்தான் அத்தான் |
| செல்லம் | ; | பார்த்தீர்களா என் அண்ணன்தானே வெற்றி பெற்றார். |
| கணவன் | : | ஆஹா ஓட்டத்தில் உன் அண்ணன் பெரிய சூரன்தான். |
| செல்லம் | ; | எங்கள் பரம்பரைக்கு என்றுமே தோல்வி கிடையாது. இன்று அவர்தான் போருக்குச் செல்வார். போய் வாருங்கள் அண்ணா. |
| மைத்துனன் | ; | என்ன அத்தான், சோர்ந்து இருக்கிறீர்? போய் வரட்டுமா? |
| கணவன் | : | (பெருமூச்சு விட்டு) போய் வாரும் |
| மைத்துனன் | : | வாழட்டும் சோழ நாடு! |
| இருவரும் | : | வாழட்டும் சோழ நாடு! |

**காட்சி 3**

**இடம் : தெரு**

(முதல் நாள் போர் முடிந்து படைவீரர்கள் வீடு திரும்புகின்றனர்)

| | | |
|---|---|---|
| செங்கமலம் | : | அதோ போருக்குச் சென்றவர்கள் திரும்பி வருகிறார்கள். |

ஒன்றாம் வீரன் : அப்பா போர் என்றால் இதுவல்லவா போர்?

இரண்டாம் வீரன் : என் வாளுக்கு இன்று நல்ல வேட்டை கிடைத்தது

ஒன்றாம் வீரன் : இறுதியில் வெற்றி தோல்வியின்றி முடிந்ததே அதுதான் எனக்கு வருத்தம்

செல்லம் : ஐயா என் அண்ணன் இன்னும் வரவில்லையா?

ஒன்றாம் வீரன் : யாரு, அம்பலவாணனா?

செல்லம் : ஆமாம்.

ஒன்றாம் வீரன் : ஐயோ அவனுடைய வாள் வலிமையும் தோள் வலிமையும் கண்ட எதிரிகள் சிதறியோடிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. குதிரைப் படைகளுக்குள் புகுந்து, பல குதிரைகளின் கால்களையும் தலைகளையும் வெட்டி வீழ்த்தினான். இன்று அவன் போராடிய ஆற்றலை நம் தளபதியே வியந்தார். ஆனால் சற்று முன்தான் பகைவரது வாளால் அவன் வெட்டுண்டு போனான்.

செல்லம் : ஆ! அண்ணா!
(சோகமுற்று உட்கார்ந்து விடுகிறாள். விடியும் மட்டும் அதே நினைவால் வருந்துகிறாள். கோழி கூவுகிறது. செல்லம் அழுதுகொண்டிருக்கிறாள்)

செங்கமலம் : அழாதே செல்லம்., இனி அழுது பயனென்ன? தன் கடமையை நிறைவேற்றி அழியாப் புகழ் பெற்றான் அண்ணன்.

செல்லம் : அக்கா, தனி மரமாகிவிட்டேனே! பாவி எவ்வளவுதான் துயரத்தை அடக்க முயன்றாலும் கண்ணீர் பொங்கி வந்து விடுகிறதே. நான் என்ன செய்வேன்?
(இரண்டாம் நாள் போரைப் பற்றி முரசொலிக்கிறது)

பறையறிவிப்போன் : வீட்டுக்கொரு ஆண்மகன்!
நாட்டைக் காக்கப் புறப்படுக!
வீட்டுக்கொரு ஆண்மகன்
நாட்டைக் காக்கப் புறப்படுக!

கணவன் : செல்லம்! செல்லம்!

செல்லம் : இதோ வந்துவிட்டேன் அத்தான்.

கணவன் : எடு வாளை! போருக்குச் சென்று வருகிறேன் (வாள் எடுத்து வருகிறாள்)

செல்லம் : ஆஹா மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள். வெற்றி நமதே! வாழட்டும் சோழநாடு!

கணவன் : வாழ்க சோழ நாடு!

மகன் : அப்பா! அப்பா!

கணவன் : வாடா என் கண்ணே!

மகன் : நானும் வருகிறேன் அப்பா!

கணவன் : கண்ணே, நான் போர் முனைக்குச் செல்கிறேன். அம்மாவோடு விளையாடிக் கொண்டிரு
(முத்தம் கொடுக்கிறான்)

**காட்சி 4**

**இடம் : தெரு**

(இரண்டாம் நாள் போர் முடிந்து, படைவீரர் திரும்புகின்றனர்)

ஒன்றாம் வீரன் : என்னப்பா கையிலே?

இரண்டாம் வீரன் : ஒன்றுமில்லை, ஒரு சிறு காயம்.

ஒன்றாம் வீரன் : எங்கே? அட பாவி படுகாயமல்லவா ஏற்பட்டிருக்கிறது; அதுவும் வலது கையில் த்சு த்சு...

இரண்டாம் வீரன் : வெட்டியவனை அந்த இடத்திலேயே பழிவாங்கிவிட்டேன். இருந்தாலும் நாளை போரில் கையில் வாளேந்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டதே என்றுதான் கவலையாய் இருக்கிறது.

செல்லம் : (தனக்குள்) எங்கே என் கணவர்? இன்னும் வரவில்லையே? அண்ணா அவர் வரவில்லையா?

இரண்டாம் வீரன் : உன் கணவரா அம்மா?

செல்லம் : ஆமண்ணா.

இரண்டாம் வீரன் : அம்மா அவர் இன்று போரிட்ட வீரத்தை நினைத்தாலே புல்லரிக்கிறது. அவர் யானைப் படைகளுக்குள்ளே புகுந்து, பல யானைகளின் கால்களையும் துதிக்கைகளையும் வெட்டி வீழ்த்தினார். ஆனால் இறுதியில் அவரையும் எதிரியின் வாள் வெட்டி வீழ்த்தி விட்டதம்மா

செல்லம் : ஐயோ, என் அன்பே நான் என்ன செய்வேன்?
(மூர்ச்சிக்கிறாள் விடியுமட்டும் அதே நினைவால் வருந்துகிறாள். கோழி கூவுகிறது. தோழி செங்கமலம் தேற்றுகிறாள்)

செங்கமலம் : அழாதேயம்மா! நாம் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்,

செல்லம் : அக்கா, இந்தப் பாவியின் உயிர் இன்னும் இருக்கிறதே நேற்று அண்ணன் இறந்தார். இன்று ஆளனும் மறைந்தார். பிறந்த இடமும், புகுந்த இடமும் என்னைக் கைவிட்டுவிட்டதே அக்கா வெற்றியோடு திரும்பும் அவருக்கு என் கையால் வீரவாகை சூட்டி மகிழலாமென் றிருந்தேனே, இன்பக் கனவெல்லாம் மணற்கோட்டையாகி விட்டதே!

செங்கமலம் : களத்தில் குதித்த பிறகு வாழ்வும் சாவும் நம் கையிலா இருக்கிறது? எழுந்திரம்மா, எழுந்திரு, முகத்தைக் கழுவிக்கொள்.

செல்லம் : உயிரைப் பிரிந்து உடல் மட்டும் வாழ முடியாது.

செங்கமலம் : என்ன? இதென்னம்மா விபரீதமான முடிவு. கணவனை யிழந்த துயரத்தில் உன் கண்ணான செல்வனை மறந்து விட்டாயே! செல்லம் உன் வாழ்வின் மணி விளக்கல்லவா இவன்? அணைந்து போன இந்தக் குடும்பத்தில் ஒளி பரப்ப இருக்கும் அவனுக்கு உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அவன் முகத்தைப் பார்த்தாவது உன் மனத்தை மாற்றிக் கொள். எழுந்திரம்மா!
(மூன்றாம் நாள் போர்பற்றிப் பறையறிவிப்போன் தெரிவிக்கிறான். முரசு ஒலிக்கிறது.)

பறையறைவோன் : வீட்டுக்கொரு ஆண்மகன்
நாட்டைக் காக்கப் புறப்படுக!
வீட்டுக்கொரு ஆண்மகன்!
நாட்டைக் காக்கப் புறப்படுக!

செல்லம் : மணிவண்ணா! மணிவண்ணா!

மணிவண்ணன் : அம்மா!

செல்லம் : இங்கே வாடா என் கண்ணே!

மணிவண்ணன் : ஏனம்மா?

செல்லம் : விடிந்ததும் விடியாததுமாக எங்கே போய் விட்டாயப்பா?

| | | |
|---|---|---|
| மணிவண்ணன் | : | விளையாடப் போனேனம்மா |
| செங்கமலம் | : | ஐயோ பாவம்! ஒன்றுந்தெரியாத பிள்ளை! |
| செல்லம் | : | விளையாடும் நேரமா இது? போர்க்களத்தில் விளையாட வேண்டிய நேரத்தில், புழுதியிலா விளையாடுவது? மாற்றானுடன் விளையாட வேண்டிய நேரத்தில் மண்ணிலா விளையாடுவது? என் செல்லமே இப்படிவா, உட்கார். எண்ணெய் பூசி தலைவாரி முடிக்கிறேன். |
| மணிவண்ணன் | : | ஏனம்மா? |
| செல்லம் | : | என் செல்லமே, நீ உடனே போருக்குச் செல்ல வேண்டும். |
| செங்கமலம் | : | ஹா! என்னம்மா இது? |
| செல்லம் | : | உன் மாமாவையும் அப்பாவையும் கொன்று வீழ்த்திய சேரர் வீரர்களைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும். குலப்பெருமையைக் காப்பாற்ற வேண்டும். தெரியுமா? |
| மணிவண்ணன் | : | அப்படியே ஆகட்டும் அம்மா நேற்றே அப்பாவுடன் போகவேண்டுமென்று புறப்பட்டேனே. அப்பாதான் என்னை விட்டுவிட்டுப் போய் விட்டார். இன்றைக்குத்தான் என் மனம் நிம்மதி அடைந்தது. எதிரிகளின் படைக்கு எமனம்மா எமன்<br>(முத்தம் கொடுக்கிறாள்) |
| செல்லம் | : | அப்படிச் சொல்லடா என் செல்லமே |
| செங்கமலம் | : | அடி பாவி! என்னடி இது? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? முந்தாநாள் அண்ணனைப் பறிகொடுத்தாய் நேற்று கணவனை இழந்தாய் இன்று உனக்கென்றிருக்கும் ஒரே மகனைப் போருக்கு அனுப்பத் துணிகிறாயே, போர்க்களத்திற்குப் போகும் பருவமா இது? |
| செல்லம் | : | அக்கா நம் நாட்டிற்காகப் போராட வேண்டிய இந்தச் சமயத்தில் எனக்கிருக்கும் ஒரே மகன். வீட்டுக்குள்ளிருந்து விளையாடுவதா? பகைவர் நம்மை நெருங்கி நிற்கும்போது படுகளத்துக்குச் செல்ல இயலாவிட்டால், என் மகன், ஆண்மகன் என்று யாருக்காக வாழ வேண்டும்? இந்தா, இந்த வேல் உன் கையில் உள்ளளவும் நாட்டுக்காகப் போராடு மகனே! வாழ்க சோழநாடு! |
| செங்கமலம் | : | கண்ணே மணிவண்ணா? வேண்டாமடா! உன் தாய் ஏதோ வெறிகொண்டு பிதற்றுகிறாள். உன்னைத் தவிர அவளுக்கு வேறு யாருமில்லை. எப்படியும் நமது மன்னர் இன்று வெற்றி பெறுவார். நீ போக வேண்டாம். போர்க்களத்தைப் பார்த்தாலே..... |
| மணிவண்ணன் | : | என்னைக் கோழையென்றா எண்ணிக் கொண்டீர்கள். வீரர் குடியில் பிறந்த வீரனம்மா நான் படுகளத்தைக் கண்டு பயந்தா ஓடிவிடுவேன்? விலகுங்கள் அப்புறம். வாழ்க சோழ நாடு!<br>(மூன்றாம் நாள் போர் முடிந்து வீரர் திரும்புகின்றனர்) |
| ஒன்றாம் வீரன் | : | இன்னும் ஒரே நாள்! நமது மன்னர் வெற்றி வாகை சூடிவிடுவார். |
| இரண்டாம் வீரன் | : | அதில் ஐயமென்ன? இன்றே சேரர் படை சிதறுண்டு விட்டதே! மன்னனே முனைமுகத்தில் நின்று போராடியும் வெற்றி நம் பக்கம்தானே நின்றது. |
| ஒன்றாம் வீரன் | : | சேரனும் நல்ல சூரனப்பா. திறமையாகத்தான் போராடினான். என்ன இருந்தாலும், நம் மன்னருக்கெதிரே நிற்க முடியுமா? |

செல்லம் : ஐயா, என் மகன் இன்னும் வரவில்லையே. அவனைப் பார்த்தீர்களா?

இரண்டாம் வீரன் : ஏனம்மா, உனக்குக் கொஞ்சமாவது முன் யோசனை வேண்டாமா? சிறு குழந்தையைப் போருக்கனுப்பி விட்டாயே! அவன் என்ன செய்வான்? பாவம் எதிரியின் வேலைக் கண்டு பயந்து போயிருப்பான். அந்த வேல் அவனது முதுகில் தாக்கிக் கொன்றிருக்கும்.

செல்லம் : என்ன? என்ன மகன் முதுகில் காயம் பட்டு இறந்தானா? இல்லை, பொய், இப்படி நடந்திருக்கவே முடியாது. என் மகன் கோழையல்ல. கொடுங்கள் அந்த வாளை (வீரனிடமிருந்து வாளை உருவி) இதோ.. போர்க்களம் சென்று பார்க்கிறேன். என் மகன் முதுகிற் காயம்பட்டு இறந்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய உறுப்பை இன்றே அறுத்தெறிகிறேன்.
(ஓடுகிறாள்)

ஒன்றாம் வீரன் : ஆஹா! மறக்குடி மடந்தையப்பா இவள். முந்தா நாள் அண்ணனைப் பறிகொடுத்தாள். நேற்று கணவனை இழந்தாள். இன்று தன் ஒரே செல்வன் இறந்தானென்று கேட்டும், அவள் மனம் கலங்கவில்லை. முதுகிலே காயம் என்றதும் அவளுக்கு வந்த ஆவேசத்தைப் பார்த்தாயா? இத்தகைய தாய்மார்களால்தான் தமிழ்க் குலம் தழைக்கிறது.

**காட்சி 5**

**இடம் : போர்க்களம்**

(போர்க்களத்தில் ஒரு கையில் தீவட்டியுடனும் ஒரு கையில் வாளுடனும் செல்லம் தன் மகனைத் தேடுகிறாள்)

ஒன்றாம் வீரன் : யாரது? ஆ! ஒரு பெண், ஒரு கையில் தீப்பந்தம் மற்றொரு கையில் வாள். எதைத் தேடுகிறாள்? பிணங்களைப் புரட்டிப் பார்க்கிறாளே, ஏன் இப்படித் தலைவிரிகோலமாய் ஆவேசங் கொண்டவளைப் போல் அலைகிறாள்? ஐயோ பாவம், யாரைப் பறி கொடுத்தாளோ? அம்மா அம்மா யாரைத் தேடுகிறீர்கள் உங்கள் உறவினர்கள் யாராவது?

செல்லம் : என் மகன்... என் மகன்...

ஒன்றாம் வீரன் : மகனா? த்சு த்சு... எத்தனை வயதிருக்கும் தாயே? அடையாளம் சொல்லுங்கள். நானும் தேடிப் பார்க்கிறேன்.

செல்லம் : பத்தாண்டுப் பாலகன் என் மகன்.

ஒன்றாம் வீரன் : ஓ அந்த இளங்குழந்தையை ஈன்ற தாய் நீங்களா? ஆஹா தாயே! நீங்கள் செய்த பாக்கியமே பாக்கியம் இன்றைய போரில் அந்தப் பாலகன் காட்டிய வீரம் – அப்பப்பா குழந்தையா அவன்? இல்லை இல்லை கூற்றுவன் போல் நின்றான். எதிரிகள் முன். மன்னரும் மாற்றாரும் அந்த இளம் பிள்ளையின் இணையற்ற வீராவேசத்தைக் கண்டு, வியப்பே வடிவாக நின்றார்கள். தாயே!

செல்லம் : ஆ!

ஒன்றாம் வீரன் : இத்தகைய வீரமகனைப் பெற இவன் தாய் என்ன நோன்பு நோற்றாளோ என்று எல்லோரும் வாய்விட்டுக் கூறினர் தாயே! ஆனால் இன்றைய வெற்றிக்குக் காரணமாயிருந்த அந்த இளஞ்சிங்கம், இறுதியில்

வீரசுவர்க்கம் அடைய நேரிட்டது.

| | | |
|---|---|---|
| செல்லம் | : | எங்கே அவன் உடல்? எங்கே என் மகன்? |
| ஒன்றாம் வீரன் | : | சிறப்பான முறையில் தங்கள் வீரத்திருமகனின் உடலை அடக்கம் செய்ய வேண்டுமென்பது மன்னரின் கட்டளை. அதற்குக் காவலாகத்தான் நான் நிற்கிறேன். இதோ இப்படி வாருங்கள் தாயே! (துடிதுடித்துச் செல்கிறாள்) |
| செல்லம் | : | ஆஹா! மார்பிலே காயம்! கையிலே வாள்! என் குலக்கொழுந்தே, நீயே வீரன்! நீயே வீரன்! சிங்கத்தின் வயிற்றிலே நரி பிறக்காது. நான் பெற்ற மகனே, உன்னைக் கோழையென்று சொன்னானே ஒரு கயவன், அவன் அழிந்து போகட்டும்! என் வயிற்றில் பால் வார்த்தாய் செல்வமே! உன்னைப் பெற்றபோது நான் அடைந்த மகிழ்ச்சியைவிட இப்போது பெரு மகிழ்ச்சி அடைகிறேனடா கண்ணே. என் மகன் வீரன்! அவனுக்கு நான் ஊட்டியது வீரப் பால்! வாழட்டும் வீரர் பரம்பரை! வாழ்க சோழ நாடு! |

**காட்சி 6**

**இடம் : சோழர் பாசறை**

(வெற்றி முழக்கம்)

| | | |
|---|---|---|
| எல்லோரும் | : | வாழ்க சோழநாடு! வாழ்க சோழமன்னர்! |
| ஒற்றன் | : | மன்னர் பிரான் வாழ்க! சோழர் பெரும! சேரமன்னர் உடனே போரை நிறுத்தும்படி தம் படைக்குக் கட்டளை இட்டுவிட்டாராம். |
| சோழன் | : | ஏன்? தோல்வியை ஒப்புக் கொள்கிறாரா? |
| ஒற்றன் | : | காரணம் புதுமையானது மன்னவா! நேற்று நடந்த போரில் சேரமன்னரின் முதுகில் சிறிது காயம் பட்டு விட்டதாம். முதுகில் காயம் ஏற்பட்டது சேரர் பரம்பரைக்கு இழுக்கு என்று சேரமன்னர் துடியாய்த் துடித்தாராம். அந்தப் பழியைப்போக்கிக் கொள்வதற்காக அவர் உணவும் நீரும் அருந்தாமல், வடக்கு நோக்கியிருந்து உயிர் விடக் துணிந்து விட்டாராம். இச்செய்தி சேரர் பாசறையில் ஒரே பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. (வெற்றி முழக்கம்) |
| ஒரு வீரன் | : | வெற்றி! வெற்றி! சோழ மன்னருக்கு வெற்றி! இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? வாழ்க சோழ மன்னர்! |
| எல்லோரும் | : | வாழ்க வாழ்க |
| சோழன் | : | நிறுத்துங்கள்? நிறுத்துங்கள் ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? எதற்கு இந்த வெற்றி முழக்கமெல்லாம்? இதுவா வெற்றிச் செய்தி? சேரன் நம்மிடம் சரணடைந்து விட்டானா? இல்லை. சேரர் படைதான் தோற்றதா? பின் ஏன் நீங்கள் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறீர்கள்? அமைச்சரே வருந்துகிறேன். சோழர் பரம்பரை தோன்றிய காலந்தொட்டுப் போரில் புறங்காட்டி ஓடுபவர் மீது அம்பு எய்ததே இல்லை. நேற்றுச் சேரனும் புறங்காட்டி ஓடவில்லை. அவரது முதுகில் நம் அம்பு எப்படிப் பாய்ந்தது? எதிரியின் முதுகில் காயப்படுத்தியது நமது வீரத்துக்கு இழுக்கன்றோ? இந்தப் பெரும் பழியைத் துடைக்காவிட்டால், சோழர் பரம்பரையின் புகழெல்லாம் மண்ணாகி விடுமே! இது எனக்கும் பழி, |

என் பரம்பரைக்கும் இழுக்கு அமைச்சரே! சேரனை முதுகிற் காயப்படுத்திய பழியைப் போக்க நானும் வடக்கு நோக்கியிருந்து உயிர் விடத் தீர்மானித்து விட்டேன்.

(வடக்கு நோக்கி உட்காருதல்)

அமைச்சர் : மன்னவா இதென்ன முடிவு? ஓடுங்கள்! ஓடுங்கள் நம்புலவர் பெருமானை அழைத்து வாருங்கள். சேரர் உயிரும் சோழர் உயிரும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. சேரமன்னர் தம் முதுகில் காயம்பட்டது தம் பரம்பரைக்கு இழுக்கென்று உயிர்விடத் துணிந்தார். நம் சோழ மன்னர் சேரமன்னரை முதுகிற் காயப்படுத்தியது, தம் வீரத்திற்கு இழுக்கென்று உயிர் விடத் துணிந்து விட்டார். இது வன்றோ தமிழர் வீரம்! இந்த வீர மன்னர்களைக் காப்பாற்றினால்தான் தமிழ்நாடு வாழும். ஓடுங்கள்! நம் புலவர் பெருமானால்தான் இவர்களைப் காப்பாற்ற முடியும். விரைந்துசெல்லுங்கள். வாழ்க தமிழ் நாடு! வாழ்க தமிழரின் வீரம்!

## ஓரங்க நாடகம்

### நானும் மகாத்மாவாவேன்

**இடம் : அறிவரசனின் இல்லம்**

**காலம் :காலைநேரம்**

**இருப்போர் : அறிவரசன், பெரியவர்**

| | | |
|---|---|---|
| பெரியவர் | : | என்னடா கையில? எதடா, விழுந்து விழுந்து படிக்கிற? |
| அறிவரசன் | : | ஒரு அருமையான புத்தகத்தைப் படிக்கிறேன். பெரியவரே! |
| பெரியவர் | : | ஏண்டா பரீட்சை நெருங்குது. பாடத்தை ஒழுங்காகப் படிக்காமல், கண்ட கண்ட புத்தகத்தை எல்லாம் படிச்சிகிட்டு இருக்கே, இது உனக்கே நல்லா இருக்காடா? |
| அறிவரசன் | : | என்ன பெரியவரே, ஏதேதோ பேசிக்கிட்டு இருக்கீங்க. |
| பெரியவர் | : | பாடத்தைப் படிக்காம வேறு எதையோ படிச்சிக்கிட்டு இருக்கே. இதைப் பத்தியா தேர்வுல கேள்வி கேட்கப் போறாங்க? |
| அறிவரசன் | : | பாடப் புத்தகத்தை மட்டும் படிச்சா போதுமா? உலக விஷயத்தைத் தெரிஞ்சிக்க, மத்த புத்தகங்களைப் படிச்சா என்ன தப்பு பெரியவரே? |
| பெரியவர் | : | ஆமாம். இந்த புத்தகத்தைப் படிச்சிதான் நீ பெரிய ஆளா வரப்போற? பேசாம அதை மூடிவெச்சிட்டு படிக்கிற வழியப் பாரு. |
| அறிவரசன் | : | என்ன பெரியவரே உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? |
| பெரியவர் | : | என்னடா விஷயம் சொன்னாதான் தெரியும். |
| அறிவரசன் | : | நானும் ஒருநாள் பெரிய ஆளா வருவேன். |
| பெரியவர் | : | எப்படிடா? |
| அறிவரசன் | : | கார்ல் மார்க்ஸ் எழுதிய தாஸ் கேப்பிடல் நூலைப் படிச்சதாலேதான் ஒரு லெனின் உருவானாரு. ஷேக்ஸ்பியர் நாடகங்களை எல்லாம் படிச்சிதான் ஒரு பெர்னாட்ஷா உருவானாரு. நெப்போலியன் வாழ்க்கை வரலாற்றைப் படிச்சதாலதான் கமால் பாட்சா துருக்கியின் தந்தையானார். ஜார்ஜ் வாஷிங்டன் வாழ்க்கை வரலாற்றைப் படிச்சதாலேதான் ஒரு ரூஸ்வெல்ட் உருவானாரு. லியோ டால்ஸ்டாயின் நூல்களைப் படிச்சதினால்தான் காந்தியடிகள் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. இப்ப நான் படிக்கிறது காந்தியடிகளோட சத்திய சோதனை நூல். எதிர்காலத்தில் நானும் ஒரு மகாத்மாவாக உருவாகப் போகிறேன். |